தமிழரசு

1-3-1974 40 காசு





அட்டை சொல்லும் கட்டுரை

# தலைநகரில் சிறந்த கலையரங்கம்

தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகரில் சிறந்ததொரு கலையரங்கமாக, புதுப்பிக்கப் பட்டுள்ள கலைவாணர் அரங் கம் திகழ்கிறது.

எல்லா நவீன வசதிகளும் அமையப்பெற்ற இந்தக் கலை யரங்கத்தை கடந்த 29-1-'74 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சட்டப் பேரவைக்கென 1955-ஆம் ஆண்டு கட்டப் பட்ட இக்கட்டடத்தில் 1958 முதல் சிறுவர்க்கென ஓர் அரங் கம் இயங்கி வந்தது. ஏறத் தாழ 700 இருக்கைகளும்,



குமரன்...

சிறிய அளவிலான மேடையும், 35 எம்எம். படக்காட்சி நடத்த வசதிகளுடனிருந்த இவ்வரங்கில் ஒலி அமைப்பு போதுமானதாக இருக்கவில்லை. பெரிய அளவிலான நாடகங்கள் நடத்தும் வசதிகளையும் பெருக்க வேண்டியிருந்தது.

1971-ஆம் ஆண்டு கலைவாணர் பெயரினை இவ்வரங்கிற்குச் சூட்டிய தமிழக முதல்வர் இவ்வரங்கினைச் சிறந்ததோர் கலையரங்கமாக்குவதில் பேரார்வம் கொண்டார். 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் புதுப்பிக்கப்படும் பணிகள் தொடங்கி, மிகச் சிறந்த முறையில் முடிவு பெற்றுள்ளன.

எழில் முகப்புடன் அமையப் பெற்றிருக்கும் இவ்வரங்கில் தற்போது 1,040 வசதி மிக்க இருக்கைகள் அடுக்குப்படிகள் மீது பொருத்தப்பட்டுள்ளன. இதனால் எவ்வித இடையூறும் இன்றி அனைவரும் காட்சிகளைக் காண முடிகிறது. அரங்கம் முழுவதும் குளிர்பதன வசதி (Air conditioned) செய்யப்பட்டுள்ளது. 70′ × 40′ அளவில் அமைந்துள்ள மேடையில் நாடக நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடத்த வசதிகள் உள்ளன. 70 எம். எம். திரைப்படங்கள் நடத்துதற்கான அகலத்திரையும் அதற்கான திரைப்படக் கருவிகள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த அரங்கம் 70 எம்.எம். 35 எம்.எம். படங்களைத் திரையிடமட்டுமல்ல, இசை, நடன, நாடகக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கும் ஏற்றவாறு எல்லா வசதிகளும் நிரம்பியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வரங்கின் திரைப்படக் காட்சிகள் மிதப்பது போன்ற தோற்றம் அளிக்கும் வகையில் திரை அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி அமைப்பு சென்னை நகரிலேயே முதன் முதல் இங்குதான் அமைக்கப்பட்டுள்ளது.


எழில் முகப்புடன் அமையப் பெற்றிருக்கும் இவ்வரங்கு 112 அடி நீளமும், முன்பகுதியில் 112 அடி அகலமும், அரங்கு அருகே 79 அடி அகலமும் கொண்டுள்ளது. சிற்றுண்டி விடுதி, நுழைவுச் சீட்டு கொடுக்கும் அறைகள், முதலியன முன் தாழ்வாரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத் தாழ்வாரத்தை தமிழ்நாட்டு கைவினைப் பொருள்கள் (Handi Crafts) அழகுபடுத்துகின்றன. தமிழ்நாட்டு எழிற் காட்சிகள் வண்ண ஓவியங்களாக மாடிப்படிகளின் வழியில் அழகுற வைக்கப்பட்டுள்ளன.

இவ்வரங்கின்மேற் கூரையும் பக்கச் சுவர்களும் கண்ணாடி இழைக் கம்பளங்களாலும் (Glass wool) பாரிஸ் பிளாஸ்டராலும் (Plaster Paris) அழகுற வேயப்பட்டு மிகச் சிறந்த ஒலி அமைப்புக் கொண்டதாக அமைப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலேயே இந்த அரங்கு ஒன்றில்தான் 79 அடி அகலமும், 40 அடி உள்ளடக்கமும் கொண்ட நாடக மேடை அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நாடகத் திரைச் சீலைகள் (Screen Fittings) எளிதில் தனியே எடுக்கப்படும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. நாடக மேடையினை ஒட்டி அகன்ற ஒப்பனை அறைகளும் (Green Rooms) நாடக மேடையின் முற்பகுதியில் இசைக்குழுவினர்க்கான தாழ்பகுதியும் (Orchestra Pit) உள்ளன.

**ஒளி அமைப்பு**


இந்த அரங்கிற்குத் தேவையான மொத்த 11 கே.வி. (K.V.) மின் சக்தியை மின்வாரியத்திடமிருந்து உயர்மின் அழுத்தமாக (H.T. Supply) பெற்று 250 கே.வி.ஏ. திறனுள்ள இரண்டு மின் அழுத்த மாற்றிகள் (Transformers) மூலமாக சாதாரண மின் அழுத்தமாக மாற்றப்பட்டுள்ளது. அரங்கத்தின் முற்பகுதியில் கவர்ச்சியான அலங்கார மின் விளக்குகள் உள்ளன. அரங்கத்தின் உட்புறம் விளக்குகள் 20 நொடியில் தானாக படிப்படி




யாகக் குறைந்து அணையுமாறு டிம்மர் ஸ்டார்ட்டர் (Dimmerstarter) என்ற மின் பொறியுடன் அமைப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகள் தொடங்கிய பிறகு அரங்கத்தின் உள்ளே வருபவர்கள் தங்களது இருக்கைகளை எளிதாகக் கண்டு கொள்வதற்கு இருக்கைகளுக்கிடையே சிறு மின் விளக்குகள் உள்ளன. இந்த அரங்கில் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்றவாறு தேவையான மின் ஒளிவசதிகள் நிரந்தரமாகச் செய்யப்பட்டுள்ளன.

**ஒலி அமைப்பு**

இந்த அரங்கில் நவீன டிரான்சிஸ்டர்கள் பொருத்தப்பட்ட பல கோண (Steriophonic) ஒலி சாதனங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அரங்கம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்திலும் தேவையான சிற்றலை (Short wave) பேரலைகளுக்கு (Long wave) ஏற்ற ஒலி பெருக்கிகள் உள்ளன. இப்படி பல வேறு அலைகளில் இயங்கக்கூடிய ஒலி பெருக்கிகள் அமைக்கப்பட்டுள்ளதால், ஒலித் தன்மை





செவிக்கு இனிமையாகவும், இயற்கையாகவும் இருக்கும். அரங்கத்தினுள்ளே நடைபெறும் நிகழ்ச்சிகளை, வெளியே உள்ளவர்களும் கேட்க அரங்கத்தினைச் சுற்றிலும் வெளியில் நிரந்தரமாக பொறுத்தப்பட்டுள்ள ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தலாம்.

### குளிர்சாதன அமைப்பு

பொதுவாக இம்மாதிரியான அரங்கிற்கு ஒவ்வொரு நபருக்கும் ஒரு நிமிடத்திற்கு 7 கன அடி தூய காற்று தேவை; இந்த அளவுகளின்படி 1,040 பேர்கள் அமரக்கூடிய இந்த அரங்கிற்கு 120 டன் திறனுள்ள குளிர் சாதன இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரங்கத்தினுள்ளே 75 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலையும் 60 சதம் ஈரப்பதமும் (Humidity) இருக்கும்.


சென்னை நகரத்திலுள்ள மற்ற அரங்கங்களைப் போல் அல்லாமல் இந்த அரங்கத்தின் அகலம் அதிகமாக உள்ளது. ஆகவே குளிர்ந்த காற்றை உள்ளே அனுப்பும் சாதனங்கள் அரங்கத்தின் மேல் புறத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குளிர்ந்த காற்று மென்மையாகப் பரவி அரங்கத்தில் இருப்பவர்களுக்கு வசதியான முறையில் எல்லா இடங்களுக்கும் படர்ந்து செல்லும். பயன் படுத்தப்பட்டபின், அந்தக்காற்று, அரங்கத்தின் கீழே பக்க வாட்டில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையின் வழியாக வெளியேற்றப்பட்டு திறந்த வெளிக்காற்றைவிட குளுமையாக உள்ள அதே காற்று மீண்டும் குளிர் சாதன இயந்திரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இது போன்று புதிய பல வசதிகளும் அமைந்துள்ளன.

சென்னை அரசினர் தோட்டத்தில் வாலாசா சாலையில் அமைந்துள்ள இக்கலையரங்கம் நகரில் சிறந்த கலையரங்கமாகவும் திகழ்கிறது. இதற்கான வாடகையும் மிகவும் குறைவானதாகவும் உள்ளது.

காலையிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை நிகழ்ச்சி நடத்த ரூ. 500 கட்டணமும், பிற்பகல் தொடங்கி இரவு வரை இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளோ பொதுக்கூட்டங்களோ நடத்த ரூ. 750 கட்டணமும், நாள் முழுமைக்கும் நிகழ்ச்சி நடத்த ரூ. 1,000 கட்டணமும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாவிதமான நவீன வசதிகளுடன் சென்னை நகரில் மிகக் குறைவான கட்டணத்துடன் கிடைக்கும் கலையரங்கம் கலைவாணர் அரங்கமே ஆகும்.

— மா



# நடுவுநிலைமை

சிங்கப்பூர் பா. கேசவன்

எப்பொருளையும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வரையறுத்துக் கூறுவது மட்டுமல்ல; அதன் பண்பையும் பயனையும் கற்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் தர்க்கரீதியாகவும் சுவையுடனும் எடுத்தியம்பும் ஆற்றல் மிக்க நூல் திருக்குறள்.

நடுவுநிலைமையும் அவ்வாறே திருக்குறளில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. குறள் கூறும் நிடுவுநிலைமையை ஆராயும் முன்னர், நடுவுநிலைமை என்னும் சொல் இன்று பெரும்பான்மையும், தெரிந்தோ தெரியாமலோ, தவறான பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

எதிலும் பட்டுக்கொள்ளாமல் இருப்பது, சிக்கல்களிலிருந்து நழுவப்பார்ப்பது, தன்னல நோக்குடன் "எது எப்படியானால் நமக்கென்ன?" என்றிருப்பது முதலியன இன்று நடுவுநிலைமை என்று கூறப்படுகின்றன. ஆனால் மேற்கூறப்பட்ட தன்மைகள் நடுவுநிலைமைகள் ஆகா; நடுவுநிலைமைக்கு முரணான பண்புகளே அவை.

அவ்வாறாயின், நடுவுநிலைமை என்பது யாது? நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் மூவகையினரிடத்தும் ஒரே தன்மையுடன் நடந்துகொள்வதாகும். அதாவது, நண்பரோ பகைவரோ அல்லாத நொதுமலர் (நம்மோடு எவ்விதத் தொடர்புமில்லாத அயலார்) சம்பந்தப்பட்ட காரியத்தை எவ்வாறு விருப்பு வெறுப்பற்ற தன்மையுடன் அணுகின்றோமோ, அவ்வாறே நண்பர் சம்பந்தப்பட்ட காரியத்தில் நட்புக் காரணமாக நம் உள்ளத்தில் தோன்றும் விருப்புணர்ச்சிக்கும், பகைவர் தொடர்புடைய காரியத்தில் பகை காரணமாகத் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கும் இடம் தரலாகாது. நாம் எடுத்துக் கொண்ட காரியம் மேற்கூறிய மூவரில் யாரைப் பற்றியதாயினும் சம்பந்தப்பட்டவர் யார்என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், அந்தச் செயலின் இயல்பு, அது மேற்கொள்ளப்படும் முறை, அதன் விளைவு ஆகியவற்றை மட்டுமே கருத்திற் கொண்டு அறவழி நின்று ஆராய்ந்து முடிவு காணலே முறையானதாகும். இதுவே நடுவு நிலைமை எனப்படுவது.

அறவழி நின்று ஆராய வேண்டும் என்று கூறியதிலிருந்தே நடுவுநிலைமையாளர் அறத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. நீதிக்கும் அநீதிக்கும்—அறத்திற்கும் மறத்திற்கும்—போராட்டம் நடைபெறும் போது நீதியின் பக்கம்—அறத்தின் பக்கம்—நின்று, அநீதியை—மறத்தை—அழித்தொழிக்க வேண்டியது நடுநிலையாளரின் கடனாகும். நடுவுநிலைமை என்பதன் பண்பும் பயனும் அதுவே.

மேற்கூறிய இரண்டில் ஏதேனும் ஒன்றின் பக்கம் சார்ந்து நிற்க வேண்டிய நிலை ஏற்படும் போது அதை நடுவுநிலைமை என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என்னும் கேள்வி எழக்கூடும். இவ்வினாவிற்கு விடை காணும் முறையில்தான் நடுவுநிலைமை என்பதன் அடிப்படையே அமைந்துள்ளது. ஒரு பொருளை ஆராய்ந்து முடிவு காணும் வரையில்தான் ஒருவர் நடுவுநிலைமை வகிக்க முடியுமே தவிர முடிவு கண்ட பின் நடுவுநிலைமை வகித்தல் இயலாது; அதில் பொருளும் இல்லை. நாம் ஒரு பொருளை எடுத்துக்கொண்டு, அதை ஆராயும்போது அதன் நிறையையும் குறையையும் துல்லியமாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமாயின், நம் உள்ளத்தில் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடாமல் இருக்க வேண்டும் என்பதே நடுவு நிலைமை என்பதற்குச் சரியான பொருளாகும். அப்பொருளினிடத்தே நமக்கு விருப்போ வெறுப்போ தோன்றுமாயின், நாம் நடுநிலை நின்று ஆராய முடியாமற் போய்விடும். விருப்புள்ள இடத்தில் குணமே காண்பதும் வெறுப்புள்ள இடத்தில் குற்றமே காண்பதும் மாந்தர் இயல்பு.


நடுவுநிலைமை என்பது என்ன என்று வரையறுத்துக் கூறுகின்றது பின்வரும் குறள்:

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"

இங்கே கோல் என்பது தராசு. சமன்செய்து சீர்தூக்கும் கோல் என்பதற்குத் தான் முன்பு இருபுறமும் சம்மாக இருந்து, பொருள்களை நிறுக்கும் தராசு என்பது பொருள். இதிலிருந்து இரண்டு உண்மைகள் புலனாகின்றன. ஒன்று, தராசில் பொருள் எதுவும் இல்லாத போது அது இருபுறமும் சமமாக இருக்க வேண்டும் என்பது. இன்னொன்று, ஒரு பக்கம் எடைக் கல்லையும் மறுபக்கம் பொருளையும் வைத்து நிறுக்கும்போது சரியான எடையைக் காட்ட வேண்டும் என்பது. கல்லின் எடையும் பொருளின் எடையும் சமமாக இல்லாத போது எந்தப் பக்கம் எடை அதிகமாக உள்ளதோ அந்தப் பக்கம் தராசின் முள் சாய்ந்து காட்டும் என்பதும் இதிலிருந்து குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. முன்னர் எப்பக்கமும் சாயாமல் இருந்த தராசின் முள் பொருளை வைத்து நிறுக்கும்போது பொருளின் எடையைப் பொறுத்து மாறுபடுவது இயல்பு. தராசில் பொருளை வைத்து நிறுக்கும்போதும் முன்னர் இருந்தது போலவே முள் அசையாமல் இருக்குமாயின் அதைக் கொண்டு சரியான எடையைக் காண்பது இயலாது.

நடுவுநிலைமையாளரும் தராசின் முள் போன்றே இயங்க வேண்டும். முன்பு இப்பக்கமோ அப்பக்கமோ ஒரு சிறிதும் சாயாமல் நடுவில் நின்ற தராசின் முள், பின்பு எவ்வாறு நிறுக்கப்படும் பொருளின் எடை ஒன்றினால் மட்டுமே இயங்குகின்றதோ, அவ்வாறே நடுநிலையாளரும் முன்னர் தம் உள்ளத்தில் விருப்பு, வெறுப்பு முதலிய எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் அமைந்து தாம் எடுத்துக்கொண்ட பொருளின் தன்மைக்கு ஏற்ப மட்டுமே ஒரு முடிவுக்கு வரல் வேண்டும்.

தராசின் முள் தராசில் வைத்து நிறுக்கப்படும் பொருளின் எடை கூடினாலும் குறைந்தாலும், அதற்கு ஏற்பச் சாய்ந்து, அதைச் சரிக்கட்ட உதவுவது போல நடுநிலையாளரும் தாம் எடுத்துக் கொண்ட பொருள்பற்றி நடுநிலை நின்று முடிவு கண்ட பின்னர், அது நன்மை பயக்கக் கூடியதாயின் அதைக் காக்கவும், தீமை பயக்கக் கூடியதாயின் அதைப் போக்கவும் முயல வேண்டும். இத்தகைய முடிவு காணுங்கால் குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்— என்னும் குறட்பாவை நினைவிற் கொள்ளுதல் சாலச் சிறந்தது. ஏனெனில், குணம் குற்றம் இரண்டினுள் ஏதேனும் ஒன்றை மட்டுமே உடைய மனிதரையோ, பொருளையோ காண்பது அரிதினும் அரிது.



ஒழுக்கம் என்னும் சொல் நல்லொழுக்கம் தீயொழுக்கம் இரண்டையும் பொதுவாகக் குறிக்கும் தன்மையுடையது எனினும், சிறப்பாக நல்லொழுக்கத்தையே குறிக்கின்றது. அதேபோல், அறிவு, குணம் முதலிய சொற்களும் முறையே நல்லறிவு, நற்குணம் என்னும் பொருளிலேயே வழங்கி வருகின்றன. அவ்வாறே நடுவுநிலைமை என்னும் சொல்லும் நன்மை பயக்கும் நடுவு நிலைமையைத்தான் குறிக்கின்றது என்பது வெள்ளிடைமலை. இந்த நன்மை பயக்கும் பண்பே, அதாவது, அறங் காக்கும் பண்பே வள்ளுவர் குறளின் அடிப்படையாக விளங்குகின்றது என்பதைத் திருக்குறளை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள் கூட நன்கு உணர முடியும்.

நடுவுநிலைமை ஏனைய உயர்பண்புகள் அனைத்தின் மொத்த உருவம் என்பது மட்டுமல்ல; அவற்றுக்கெல்லாம் மகுடமாக விளங்கும் தகுதி பெற்ற தனி உயர் பண்பும் அதுவேயாகும். அன்பு, அடக்கம், இன்சொல், பணிவு அறிவு, ஊக்கம் இவற்றுள் ஏதேனும் ஒன்றையோ, சிலவற்றையோ உடையவராய் அமைதல் யார்க்கும் எளிது. ஆயின், நடுவுநிலைமை உடையவராய் இருத்தல் உயர்பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றுக் குணமென்னும் குன்றேறி நிற்கும் சான்றோரால்தான் இயலும். நடுவுநிலைமை என்பது கூரிய வாள்மீது நடப்பதைப் போன்றது. நன்றி செய்தார் மாட்டு, அந்நன்றியை நினைங்குங்கால், நடுவுநிலைமை தவறக்கூடுமாதலின், அந்நிலையினும் தவறக்கூடாது என்னும் பொருள்படச் செய்ந்நன்றி அறிதலை அடுத்து, நடுவுநிலைமை என்னும் அதிகாரம் வைக்கப்பட்டது, என்று உரையாசிரியர் பரிமேலழகர் கூறுவதையும், 'ஐம்புலன்களையும் அடக்கியாளும் சான்றோரே நடுவுநிலைமை உடையவராக இருத்தல் இயலுமாதலின் அடக்கமுடைமையை அடுத்து நடுவுநிலைமை வைக்கப்பட்டதென்று, புலவர் குழந்தை கூறுவதையும் ஆழ்ந்து சிந்தித்தால் இவ்வுண்மை புலனாகும்.

''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'' என்பதும்,
''ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'' என்பதும்,
''ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்'' என்பதும்,
''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்பதும்
''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' என்பதும்,
''பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு'' என்பதும்,
''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு'' என்பதும்,
''பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு'' என்பதும்,

இவை போன்ற இன்ன பிறவும் நடுவுநிலைமையின் பண்புக்கூறுகளாய் விளங்குகின்றன. எனவே, நடுவுநிலைமை என்னும் பண்பானது நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில், குன்றின் மேலிட்ட விளக்காகக் காட்சியளிக்கின்றதெனினும் இதன் ஒளிக்கதிர் ஏனைய அதிகாரங்களிலும் ஊடுருவிச் சென்று, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குகின்றது என்பது மிகையன்று.

எனவே, நடுவுநிலைமை என்பது ஏனைய உயர்பண்புகள் அனைத்தையும் தன்னுள்கொண்டுள்ளது என்பது மட்டுமல்ல; அறத்திற்கு அடிப்படையானதும் அறம் நிலைக்கத் துணை புரிவதும் இப்பண்பேயாகும்.

# உயிர்ச் சத்தும் அளவுக்கு மீறினால்....

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வைட்டமின்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ரிக்கெட்ஸ், ஸ்கர்வி, பெலாக்ரா, பெரி பெரி, சோகை போன்ற பல்வேறு நோய்களையும், அதன் காரணமாக ஒழிப்பது சாத்தியமாயிற்று. வைட்டமின்களின் பயனுள்ள விளைவுகள் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், வைட்டமின் தயாரிப்புக்கள் குறித்து பெரும் ஈடுபாடும் உலகம் முழுவதிலும் காட்டப்பட்டது. 'ஆரோக்கியத்துக்கு வைட்டமின்கள்' என்ற கூற்று அனைவரிடமும் பரவிற்று. ஆனால் இன்று, பலவகை வைட்டமின் மாத்திரைகளும் மலிந்து காணப்படும்போது, அதிகப்படியான வைட்டமின் ஆரோக்கியத்தைத் தீவிரமாகப் பாதிக்கவும் கூடும் என்று வைட்டமின் குறித்த ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஓர் உதாரணம்: ரிக்கெட்ஸ் நோய் வராமல் தடுப்பதற்காகவோ அல்லது நோய் கண்ட பின்னர் சிகிச்சைக்காகவோ உலகம் முழுவதிலும், குழந்தைகளுக்கு வைட்டமின் 'டி' கொடுக்கப்படுகிறது. எனினும், ரிக்கெட்ஸினால் அவதியுறும் குழந்தைகளுக்குப் பெரும் அளவில் வைட்டமின் 'டி' கொடுத்தால், நோய் குணமாவதில்லை; பல நாடுகளிலும் ரிக்கெட்ஸ் நோய் முன்னைவிட அதிகமாகவும் பரவிற்று. சோதனை ஆராய்ச்சியின் மூலம் இந்தப் புதிர் விடுவிக்கப்பட்டது. உரிய காலத்தில் வைட்டமின் 'டி' உட்கொள்வது நிறுத்தப்படாவிட்டால் எலும்புகளில் மாற்றப்பட முடியாத அழற்சி ஏற்பட்டு விடுகிறதென்றும் எலும்புகளில் கால்சியம் சத்து குறைந்து, உள்ளுறுப்புக்களும், திசுக்களும் கடினமாகி விடுகின்றன என்றும் தெரிய வந்தது.

சற்று நிதானத்துடன் உட்கொள்ள வேண்டிய மற்றொரு வைட்டமின், வைட்டமின் 'ஏ' ஆகும். அதிகப்படியான வைட்டமின் ஏ, உடலில் நச்சுத் தன்மையை ஏற்படுத்திவிடும். ஆர்க்டிக் பகுதிகளில் உள்ளவர்கள், பெருமளவு கரடியின் கல்லீரலை உண்ணுகின்றனர். 'காட்' மீனினது கல்லீரலில் இருப்பதைப் போன்று, கரடியின் கல்லீரலிலும் வைட்டமின் ஏ அதிகமாகக் காணப்படுவதால், அவர்களில் சிலருக்கு அதனால் உடல் நச்சுப்பட்டுள்ளது. எனினும் வைட்டமின் டியைப் போல, வைட்டமின் ஏ, பொதுவாக அதிக அளவில் உட்கொள்ளப்படுவதில்லை. சாதாரணமாக ஒரு மனிதனுக்குத் தேவையான வைட்டமின் ஏயின் அளவு 1·5 மில்லி கிராம் தான்; இது அவனது வாடிக்கையான உணவிலிருந்தே அவனுக்குக் கிடைக்கக் கூடும்.

மிகவும் பிரபலமாக விளங்கும் வைட்டமின், வைட்டமின் 'சி' ஆகும். வைட்டமின்களைப் பற்றி நன்கறிந்துள்ளவர்களில் வைட்டமின் சியைப் பற்றி அஞ்சுபவர்கள் எவருமே இருக்க முடியாது. வைட்டமின் சி என்பது அஸ்கார்பிக் அமிலம்; இதனை குளுகோஸுடன் சேர்த்துக் குழந்தைகளுக்குப் பெருவாரியாகக் கொடுக்கின்றனர். குழந்தைகளும் இதனை பெரிதும் விரும்பி உட்கொள்கின்றனர். ஒரு குழந்தையின் உடலுக்கு எவ்வளவு வைட்டமின் சி தேவையோ, அதைக் காட்டிலும் பல டஜன் மடங்கு அதிகமாக இந்த வைட்டமின் சில வேளைகளில் உட்கொள்ளப்படுகிறது. எனினும் குழந்தைகளும் பெற்றோர்களும் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் உள்ளனர். ஏனெனில் வைட்டமின் சி தயாரிப்புகளும் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்று அவர்களுக்கு எந்தவித சந்தேகமும் கிடையாது. எல்லா வயதினராலும் கட்டுப்பாடற்ற ரீதியில் பரவலாக உபயோகிக்கப்படும் வைட்டமின், வைட்டமின் சி தான் என்று கூறுவது மிகையாகாது.

வைட்டமின் ஏ, வைட்டமின் டி ஆகியவற்றைப் போன்று, அதிகப்படியான வைட்டமின் சி, தெளிவாகத் தெரியும் வண்ணம் நோய்க் குறிகள் எதையும் ஏற்படுத்துவதில்லை. எனவே, நீண்ட நெடுங்காலத்திற்கு, அதிகப்படியான வைட்டமின் சியினால் ஏற்படும் விளைவுகள் எவரது கவனத்தையும் கவரவில்லை. ஆனால், அதிகப்படியான வைட்டமின் 'சி'யும், உடலில் சேகரமானால் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதை ஆராய்ச்சிகள் காட்டியுள்ளன. ஓர் உண்மையை நாம் இங்குக் கூற முடியும். ஓர் உடலில் எவ்வளவு அதிகமாக வைட்டமின் 'சி'யைச் செலுத்தினாலும் திசுக்களில் காணப்படும் வைட்டமின் சியின் அளவு அதிகரிப்பதில்லை. இது ஏன்? ஏனெனில், தேவைக்கு அதிகமான வைட்டமின் சி, அழிக்கப்பட்டு, உடலிலிருந்து வெளியேற்றப்பட்டு விடுகின்றது. இத்தகைய தற்காப்புக் கிரியையே, அதிகப்படியான வைட்டமின் சியினால் தீய விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதை நிரூபிக்கப் போதுமானது.

அதிகப்படியான வைட்டமின் 'சி' உட்கொள்வதால், தூக்கமின்மை, எரிச்சல், ஒருவித நிலை கொள்ளாத் தன்மை, ஆகியவை ஏற்படக்கூடும்.

இதையெல்லாம் கூறியதிலிருந்து, வைட்டமின் தயாரிப்புக்கள் தேவையற்றவை என்றோ, அவை தீங்கு பயப்பவைதான் என்றோ முடிவுக்கு வந்துவிடக் கூடாது. கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், அனாவசியமாக அவற்றை உட்கொள்ள வேண்டியது இல்லை என்பதுதான். தினந்தோறும் 50 மில்லி கிராம் வைட்டமின் சி உட்கொண்டாலே, ஒருவரது உடலுக்கு அது போதுமானது. பழங்களிலும், பச்சைக் காய்களிலும், வைட்டமின் சி நிரம்ப உள்ளது. நமது உணவில் போதுமான அளவு இறைச்சி, மீன், ரொட்டி, பால், பால்ப் பொருட்கள், முட்டை, காய், கனிகள் ஆகியவை இருந்தால், நாம் வைட்டமின் தயாரிப்புகளை அறவே நீக்கி விடலாம் என்றும் சொல்லப்படுகிறது.

# நெல்லை மாவட்டத்தில் மீன்வளப் பெருக்கமும் மீனவர் நல்வாழ்வும்

திருநெல்வேலி மாவட்டம் தமிழகத்தில் மீன் வளத்திற்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் கடற்கரை 176·14 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இங்கு 22 மீனவர் வசிக்கும் கிராமங்களும் எண்ணற்ற தற்காலிக மீனவர் கிராமங்களும் உள்ளன.

1959-ஆம் ஆண்டு வரை கட்டு மரத்தாலும் வளத்தாலும், காற்றின் வேகத்தைக் கொண்டு செலுத்தும் படகுகளாலும் மீனவர்கள் மீன் பிடித் தொழில் நடத்தி வந்தனர். அப்பொழுது மீன் பிடிப்பும் 18,000 டன்களாக இருந்தது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் 41 விசைப்படகுகளை மீனவர் குழுக்களுக்கும் மீனவர் கூட்டுறவுப் பேரவைக்கும் அரசு வழங்கியுள்ளது. இதன் காரணமாக 1966-67—ஆம் ஆண்டு இறுதியில் மீன் பிடிப்பு 22,500 டன்களாக உயர்ந்துள்ளது. இந்தக் கட்டுமரங்களைக்கொண்டும், தோணிகளைக் கொண்டும், விசைப்படகுகளைக் கொண்டும் மீனவர்கள் 1,400 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள மீன்பிடித் தளங்களில் மட்டுமே மீன் பிடிக்க இயலுகிறது. மீன் வளத்தைப் பெருக்க மேலும் 4,500 கிலோ மீட்டர் பரப்பளவுள்ள மீன் பிடித்தளங்களை அதிக குதிரைச் சக்தி வாய்ந்த விசைப்படகுகளைக் கொண்டு மீன் பிடிக்க முயல வேண்டும்.

நெல்லை மாவட்டக் கடலில் மீன் பிடிக்க நல்ல வாய்ப்புள்ள தளங்கள் ஏராளமாக உள்ளபடியாலும் அவைகளை மேற்கொண்டும் நல்ல முறையில் மீன்பிடிப்பு நடத்த ஒரு கூட்டுறவுத் திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டம் திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுப் பேரவை வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவே வேளாண்மை மறு நிதிக் கழகத் திட்டம். இதன் தலைமை இடம் தூத்துக்குடியாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

(1) விசைப்படகுகள் கட்டும் தளம் ஒன்று நிறுவுவது, அதற்காக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குவது.

(2) விசைப்படகுகளைத் தயாரித்தல்.

(3) நவீன மீன்பிடிப்பு முறைப்படி மீன் பிடிப்பை அதிகரித்தல்.

(4) பிடிக்கப்பட்ட மீனை பனிக்கட்டி நிலையத்தில் குளிர வைத்துப் பாதுகாத்தல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல்.

(5) மீன்துறைக்குச் சொந்தமான பனிக்கட்டி நிலையங்கள், குளிர் பதன அறைகள், மீனை டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலை இவைகளைக் குத்தகைக்கு எடுத்து நடத்துதல்.

(6) மீன் பிடிப்பைத் தீவிரப் படுத்துதல்.

(7) விசைப்படகுகளைப் பழுது பார்ப்பதற்காக வசதிகள் செய்தல், அவைகளுக்கு உதிரி உறுப்புகள் வழங்குதல்.


(8) கூட்டுறவு தத்துவத்



தின் அடித்தளத்தைப் பலப்படுத்தி மேற்கூறிய பணிகளை வகுத்துச் செயல்படச் செய்தல்.

இத்திட்டத்தின் கீழ் முதல் ஆண்டு 30 படகுகளும் இரண்டாவது ஆண்டு 30 படகுகளும், மூன்ருவது ஆண்டு 15 படகுகளும் ஆக 75 படகுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 174-ல் முதல் 30 படகுகள் கடலில் மிதக்க விடப்படும். இவைகள் ஏற்கெனவே குலுக்கல் முறைப்படி தேர்தெடுக்கப்பட்ட மீனவர் குழுக்களுக்கு வழங்கப்படும். ஒவ்வொரு படகிற்கும் ரூ. 5,000 மதிப்புள்ள நைலான் வலைகளும் வழங்கப்படும். ஒவ்வொரு குழுவிற்கும் படகுகளைக் கொண்டு மீன் பிடித்து, கொண்டுவரும் மீன்களில் 1/3 பங்கு மீன்வர் குழுவிற்கும், 2/3 பங்கு மீனவர் கூட்டுறவு பேரவைக்கும் சேரும். இப்படகுகள் கொண்டு வரும் மீன்கள் ஒரே இடத்தில் இறக்க ஏற்பாடு செய்யப்படும். கடலில் மீன் பிடிப்பதை திடீர் சோதனை செய்ய வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும். ஒவ்வொரு படகும் ஆண்டுக்கு 50 டன் மீன் பிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே மொத்தம் 3750 டன் மீன்களை ஆண்டொன்றுக்குப் பிடிக்கலாம் என்று இத்திட்டத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மீன்களில் 60 சதவிகிதம் தூத்துக்குடி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, மேலப்பாளையம் முதலிய இடங்களில் உடனேயே விற்கப்படும். எஞ்சியுள்ள 40 சதவிகிதம் தூத்துக்குடியில் ஏற்கெனவே இயங்கி வரும் பனிக்கட்டி நிலையத்திலும் குளிர் பதன அறையிலும், உறைய வைக்கும் குளிர் பதன அறைகளிலும் வைத்து பாதுகாக்கப்படும். இருல் மீன்களையும், குடை மீன்களையும் டின்களில் அடைத்து விற்க ஏற்கெனவே இயங்கி வரும் தொழிற்சாலையில் ஏற்பாடு செய்யப்படும். இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 5,000 டின்களில் மீன்களை அடைக்கும் சக்தி வாய்ந்தது.



சில்லறை விற்பனைக்கு மேற்கூறிய இடங்களில் மீன் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்படவில்லை. தேவைப்பட்டால முதல் ஆண்டு ஏற்படும் செலவினங்களில் ஏற்படும் மிச்சத்தைக் கொண்டு மேற்கூறிய இடங்களில் மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு ரூ. 78.70 இலட்சம் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையை மூன்று தவணைகளாக விவசாய மறுநிதிக் கழகம் கூட்டுறவு வங்கி மூலம் பேரவைக்கு வழங்கப்படும். பேரவை மூன்ருவது ஆண்டிலிருந்து குத்தகையை தவணை முறையில் விவசாய மறு நிதிக் கழகத்திற்குச் செலுத்தும். முழுத் தொகையும் ஒன்பது ஆண்டுகளில் அடைத்து முடிக்க வேண்டும். இத்திட்டத்தின் வெள்ளோட்ட விழா 24—1—1974 அன்று தமிழ்நாடு அரசு வனத்துறை மற்றும் மீன்துறை தனிச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்திய அரசு வேளாண்மை அமைச்சகச் செயலாளர் திரு. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், அவர்கள் படகு வெள்ளோட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். விழாவில் மீன்துறை இயக்குநர் திரு. டி.வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் சிறப்புரை வழங்கிஞர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.எஸ். சிவசாமி அவர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிஞர்.

---

ஆருவது கண்டம் என்று சொல்லப்படும் அண்டார் டிக்கின் காலநிலை விண்வெளிக் கால நிலையைப் போன்று கடுமையானதாகும். இப்பகுதியின் ஆண்டு சராசரி வெப்ப நிலை, பூஜ்யத்திற்குக் கீழ் 55.5 டிகிரி செண்டிகிரேட். வெப்பமான நாளின் மிக அதிகமான வெப்ப நிலை 20.9 டிகிரி செண்டிகிரேட். இதுவரை இங்கு அளவிடப்பட்டுள்ள மிகக் குறைவான வெப்ப நிலை பூஜ்யத்திற்குக் கீழ் 83.3 டிகிரி செண்டிகிரேட்.

இப்பகுதியில் இரவு 125 நாட்கள் நீடிக்கிறது. ஏறத்தாழ 118 நாட்கள் பகலாகவே உள்ளன.


வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5 ரூ. 355
ரூ. 10 ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5 ரூ. 337.50
ரூ. 10 ரூ. 675.00
தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

# வெண்பாப் போட்டி 71

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
- மு. கோமதி,
தனித்தமிழ் இல்லம்,
பேரூராட்சி மன்ற வீதி,
கூகலூர் அஞ்சல்,
(வழி) ஈரோடு.

ஈற்றடி : திருப்பணிகள் செய்வோம் தெரிந்து

மெய்ப்பிணிகள் போக்கி, மெலிந்தோர் தமைஉயர்த்தித்
துய்ப்பதற் கேற்றஇன்பந் தோற்றுவித்துப்—பொய்யாப்
பெரும்பணியால் பூந்தமிழர் பேறுறத் தக்க
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—மு. கோமதி, கூகலூர்.

மக்கட் பெருக்கத்தை மட்டுப் படுத்தியே,
சிக்கனம் கைக்கொண்டு சீர்பெற்று—மக்கள்
அறிவுபெறத் தூண்டி அவர்வளம் காணத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—வி. ராஜேந்திரன், போடிநாயக்கனூர்.

நற்றமிழைக் காத்தவர்க்கும், நாடாண்ட நல்லவர்க்கும்,
கற்றடங்கித் தொண்டாற்றும் கண்ணியர்க்கும்—மற்றும்
அருட்பணிகள் செய்வார்க்கும் ஆலயங்கள் கட்டித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து!
—சண்முக தாயுமானவன், பொன்மலை.

பெருமுழைப்பை நல்கிப் பெரும்பயனைக் காண
இருள்மனத்தைக் கொண்டார் இதயம்—விரும்பும்
மருள்கொண்டு வாடுகின்ற மக்களின் வாழ்வுயரத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் சோ. பாலுச்சாமி, விருதை.

அல்லவை தீய்த்தும்; அறஞ்செய்தும்; ஓங்குபுகழ்
கல்வி வளர்த்தும் கடனாற்றி;—இல்லில்
வருத்தும் பசியோட்டி வாழ்விலொளி சேர்க்கும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

தாக்குமொழி தாங்கித் தகாதபழி தாம்பொறுத்தே
ஊக்குமொழி இன்றெனினும் ஓயாமல்—நோக்கில்
விருப்புவெறுப் பின்றிவீ ரர்கலைஞர் போல்நாம்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் பா. வேங்கடவேள், நத்தம்.

பெற்ற சுதந்தரத்தைப் பேணி வளர்ப்பதுடன்
உற்ற தொழில்வளங்கள் ஓங்கிடவே—முற்றும்
பொறுப்புணர்ந்து நம்நாடும் பொன்நாடாய் ஆகத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

எண்ணம் செயலிரண்டும் ஏற்றமுடன் கொண்டுமனம்
திண்ணமுறப் பண்பு திகழ்ந்திடவே—இன்னும்
பொறுப்புடனே நாமென்றும் பூதலத்தோர் வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—அ. காந்தி, பி.எஸ்.சி.,பி.டி., தேவத்தூர்.

ஏழை சிரிப்பில் இறைவனைக் காணுநிலை
வாழும்நன் னாட்டின் வளநிலையம்:—தோழ!
கருப்பொருளின் கோயிலாய் நாட்டினைநாம் காத்துத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

## வெண்பாப்போட்டி—73

ஈற்றடி :

புத்துணர்வு சேர்க்கும் புகழ்

முடிவு நாள்—16—3—1974

நேரிசை வெண்பாக்கள் மட்டுமே அனுப்பப் பெற வேண்டும்.

# வெண்பாப்போட்டி

நாட்டில் நலம்பெருக வாட்டும் துயர்கருக
ஆட்டும் பசிவிலக ஆர்வத்தைக்—கூட்டி
ஒருநாளும் வற்ற உயர்வான அன்பால்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—பண்ணை மதிவாணன், கோம்பை.

மக்கள் பணியே மகேசன் பணியென்று
முக்கண்ணன் செல்வம் மொண்டெடுத்து—தக்க
வறிஞர்க்கே இல்அமைத்து வாழ்வளிப்போம் மற்றும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—என். சண்முகம், அனக்காவூர்.

மக்களுக்குச் செய்தொண்டே மாதேவர்த் தொண்டென்றால்
புக்கிலின்றி நோயுற்றோர், போக்கற்றோர்,—தொக்க
மருந்தோ டுணவளிக்கும் வாழ்வில்லம் காணும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

குறைசொல்லும் கூட்டம் குமையட்டும்! நாம்நம்
நெறிசெல்வோம்! நன்றே நினைப்போம்!—முறையே
விருப்புடனே நாட்டுமக்கள் மேலுயர்ந்து வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—கலாவதி சீனிவாசன், பி.ஏ., பி.டி., கீழ்க்கொடுங்காளூர்.

மூடப் பழக்கம் 'முடைநாற்ற'க் கொள்கைகளைச்
சாடி விரட்டிடுவோம் செந்தமிழீர்!—ஈடில்
பெரும்பணியாய்த் தந்தை பெரியார்தாம் செய்த
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

தன்மானம் என்னும் தகைமையினை எம்மிடையே
பன்முறையில் சேர்த்த பகலவனே! என்றும்
உருப்படியாய் யாம்வாழ ஓர்ந்துழைத்தாய் உன்றன்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் நா. தண்டபாணி, பூங்குடி.

வாய்மையே வெல்லுமெனும் வண்டமிழர் கோட்பாட்டைச்
சேய்மை யுளநாடும் சிந்திக்கத்—தூய்மைத்
திருப்புகழை யீட்டுதற்குத் தேயமெங்கும் சுற்றித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் பூங்குழலி, பொருளூர்.

பள்ளத்தில் வீழ்ந்தோர்க்கே பாடுபட்டு நாட்டோரின்
உள்ளத்தில் வாழ்கின்றார் நம்பெரியார்—கிள்ளையே!
விருப்புடனே தன்னலத்தை வேரோடு நீக்கித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—பா. பக்தவத்சலம், மன்னார்குடி.

ஏழ்மை அறியாமை இன்னுநோய் பற்பலவாம்
தாழ்மை உயர்வற்றுத் தாய்நாட்டின்—வாழ்வு
உருப்பெறவே நாமெல்லாம் ஒற்றுமையாய் நின்று
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—க. மீனாட்சிசுந்தரம், ஆவுடையார்கோவில்.

கற்றோம் அறிவியற் கல்விகள் ஆயிரம்
பெற்ற அறிவைப் பெருக்கிநாம்—சற்றே
உருப்படியாய் இந்த உலகினர் வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—பகவதி அப்பன், சென்னை-5.

நாட்டின் நலம்பெருக நன்மை வளம்பெருக
வீட்டின் குறைகள் வெருண்டோட—நாட்டில்
அரும்பணிகள் ஆக்கமுற அன்புடனே நல்ல
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—மா. குணசேகரன், தேவகோட்டை.

இருமை வகையறிந்தே இன்பமுடன் வாழ்ந்து
பெருமையுடன் பார்புகழப் பண்பால்—அருமை
பெரும்பணிகள் செய்தநம் முன்னவர்போல் நாமும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் கஸ்தூரி, நான்குனேரி.

மக்கள் விருப்பறிந்து மாட்சியுடைக் கோலோச்சி,
திக்கெட்டு மீர்க்கும் செயலோடு,—மிக்க
உருப்பெற்ற சாதிமதம் ஓலமிட்டே ஓடும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் பொன்னியின் செல்வன், திருவேதிக்குடி.

நல்ல குடியிருப்பு நல்லுணவு நல்லாடை
எல்லா எளியவர்க்கும் ஈந்திடவே—எல்லாம்
ஒருங்கிணைந்து பாடுபட உள்ளமுளோர் வாரீர்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—ரகீம், சின்னக்கற்பூரம்பட்டி.

மறுவாழ்வு; கண்ணொளி; மாந்தர்க்குக் கல்வி;
வறுமைதீர் நிலப்பட்டா, நலத்திட்டம்:—சிறுதொழில்
பெருகிடவே சட்டங்கள்; நாட்டுடைமை; அரசின்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் நா. கோவிந்தச் செட்டி, வெங்கட்டம்பட்டி.

கண்ணைத் திறந்திட்டோம்; கைவண்டி மாற்றினோம்;
எண்ணித் தொழுநோயர்க் கில்லீந்தோம்—மண்ணில்
உருப்படியாய் ஏழைகளுய்வடைய இன்னும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—முரு. இராசாங்கம், பி.எஸ்சி., பி.டி., குடவாயில்.

தூரெடுப்போம்! மண்சுமப்போம்! துப்புரவுச் சேவைதனை
ஊரூராய்ச் செய்திடுவோம்! ஓய்வறியோம்!—சீராய்
அரும்பாதை, பாலம், அணையாவுங் கட்டித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

ஆரூர் திருத்தேர் அழகு வலங்கண்டோம்!
சீருராம் பூம்புகாரைச் செய்தமைத்தோம்!—ஊரில்
திருத்தமிழ்ப் பூசை செவியுற்றோம்! இன்னும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.
—புலவர் புனிதா மணாளன், ஓலைப்பாடி.

# வெண்பாப்போட்டி

உள்ள உணர்வாலே ஒன்ருேம்; பள்ளமுறும்
வெள்ளமெனப் பாய்ந்தெழுந்து வென்றுயர்ந்தோம்—வெல்லும்
பெருமையுடன் நாம்வாழப் பேரறிஞர் தேர்ந்த
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—தவமுத்து. அண்ணுமலை, பி.ஏ.பி.டி. தவசி.

சாதிக் கொடுமை தகர்த்தெறிந்தோம்! யாவர்க்கும்
நீதி முறையாய் நிலைசெய்தோம்!—மீதிப்
பொறுப்பும் உணர்ந்திதுவே பொற்காலம் ஆகத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

தஞ்சையுங் கல்லணையுந் தார்சூடுந் தில்லையுங்
கொஞ்சுமொரு காஞ்சியுங் கூடலுந்தான்—துஞ்ச
உருப்படியாய் நாமும் உழைப்பாளி வாழத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—து. உருக்குமணி, கரட்டூர்.

கலைக்கோயில் ஓவியங்கள் காண்பரிய சிற்பம்
மலைக்கோயில் செய்ய மலையோம்—நிலைத்த
அருமைசால் நம்மரசு ஆணையிட்டாற் போதும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—புலவர் க.சு. தமிழ்ப்பிரியன், ஆலாம்பாளையம்.

எண்ணமெனும் கோயிலுக்கு ஏற்றுகின்ற தீபந்தான்
எண்ணரிய நற்கருமம் ஏற்றிடுதல்—எண்ணி
அரும்பணிகள் ஆற்றிட்ட ஆன்ருேர்கள் போன்று
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, ஆதமங்கலம், (வ.ஆ.).

கல்லில் கலைவழியும் கன்னித் தமிழகம்போல்
இல்லை இகமெங்கும் எண்ணியிதைப்—பல்லோர்
விருப்புடனே காண விரைந்திடவே இங்கு
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—நா. சுந்தரேசன், செங்காடு.

அன்பின் திருவுருவாய் அண்ணல் பிறந்திட்ட
பொன்விளையும் பூமியிலே அண்ணுவும்;—பொன்ரு
அரும்பணிகள் ஆற்றிட்டார் அன்னுர்போல் நாமும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—வெ. கோதண்டன், அனப்பத்தூர், (வ.ஆ)

கோயில்கள் தோறும், குலவுந் தமிழிசைக்கும்;
நோய்தீர்க்கும் சித்தரது நுண்கலைக்கும்;—ஆயும்
உருப்பொருள் காண்பதற்கும்; உள்ளம் மகிழ்ந்தே
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

கலைச்சின்னம் காண்போர் கரையிலவாய்க் கோயிற்
சிலைச்சிற்பம் காக்கின் சிறப்பே!—மலை! ஆம்!
திருவாரூர்த் தேரோட்டிச் செய்தபணி போலே
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—தி. பார்த்தசாரதி, மதுரை-1.

நாட்டுக் குழைப்போர் நடுகல்லாய் நின்றுயர்வர்!
பாட்டுப் பொருளாவர்! பால்மொழியே!—நாட்டில்
பெருவளங்கள் ஓங்கிப் பிணிவறுமை நீங்கத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—புலவர் ந. கருணுநிதி, வங்கனூர்.

சாதிநிலை போக்கிச் சமத்துவ மாக்கவும்;
நாதியற்ருர் மண்ணில் நலம்பெறவும்;—நீதியான
பேருழைப்பால் நாடு பெரிதும் உயரத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—புலவர் கா.நா. இலக்குவன், சின்கோணு.

நாடு மொழியினம் நன்மைகள் பெற்றிடவே
வாடும் செயல்நீக்கி வையத்தில்—கூடும்
அருங்குணத்தார் குன்ருமல் ஆர்ந்திடவே, ஒப்பில்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—த. இராமலிங்கன், சின்னமணல்மேடு.

ஆலயங்கள் உண்டாக்கி, ஆண்டவனைக் கொண்டாடிக்
காலத்தை வீணே கழிக்காமல்—ஞாலம்
உருப்படவே நாமெல்லாம் ஓய்வின்றிக் கல்வித்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

ஆலயங்கள் கட்டி அருகில் குளந்தொட்டு
கோலக் குடமுழுக்குச் செய்தலினும்—காலம்
உருக்குலைத்த ஏழை உயர்வாழ்வு காணும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—சு. தங்கப்பன், பி.எஸ்சி., பி.டி., சிங்கோணு.

புதுக்கோட்டை மாவட்டம் பூத்ததுகாண் நாட்டில்!
இதுபோல் எழயின்னும் ஏற்போம்!—அதனுல்
உருவாகும் கல்வளத்தை உய்யநா மின்னும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—இரா. ஈகவேந்தன், கத்தரிப்புலம்.

பெற்ருேரை ஆதரித்துப் பேணல்; திருத்தாலி
பெற்ருளை யும்மதித்தல்; பிள்ளைகளுக்—குற்ற
அருக்கல்வி ஊட்டி அவையேற்றல் ஆன
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—நோடுதீர மதமாடிசிதானு, காளனூறு.

தாய்க்கொரு கேடென்ருல் தாய்மொழிக்குத் தீதென்ருல்
தாய்நாட்டை மாற்ருன் தனதென்ருல்—ஓய்வே
கருதாமல் தீமையைக் கல்வி எறியும்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—விஞேதலீலன், இரா. வெள்ளோடு.

ஊழ்வினையென் றேங்கா துழைக்குங்கால், வாட்டுகின்ற
ஏழ்மைப் பிணியகலும்; யாமுயர்வோம்—தாழ்ந்து
தரங்குன்றி வீழாது தாரணியில் உய்யத்
திருப்பணிகள் செய்வோம் தெரிந்து.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

# இலக்கியப்பணி இரண்டாவது

1865 ஆம் ஆண்டிலேயே, ''அச்சேறிய தமிழ் நூல்கள்'' என்ற பெயரில் ஒரு தொகுப்பு நூலை முதன் முதலாக வெளியிட்டது ஒரு சங்கம். டாக்டர் ஜான் மர்டாக் என்பவர் எழுதிய இவ்வரிய நூலினை, 1968-ஆம் ஆண்டில் தமிழ் நாடு அரசு மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது என்றால் அத்தகைய பெருமையினையுடைய சங்கம் எதுவாக இருக்கும்?

அதுதான் சென்னைப் பூங்கா நகரில் நூறாண்டுகளுக்கு மேல் புத்தகப் பணியாற்றி வரும் கிறித்தவ இலக்கியச் சங்கம் (Christian Literature Society).

அன்னைத் தமிழுக்கு அரும் பணியாற்றிய கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் பலரை நாமறிவோம். வீரமாமுனிவர், கால்டுவெல், போப், மாயூரம் வேதநாயகம் பிள்ளை போன்ற அறிஞர்கள் தமிழுக்குப் பெரும் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்தச் சங்கமும் தொன்று தொட்டு பல நல்ல பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது.

1858-ஆம் ஆண்டில் 'கிறித்தவ சுதேச மொழிக் கல்விச் சங்கம்' என்ற பெயரில் தொடங்கப்பெற்ற இது, பதினைந்து ஆண்டுக்காலத்திற்குள் இந்தியாவிலேயே மிகப்பெரிய ஒரு புத்தக வெளியீட்டுச் சங்கமாக விளங்கிற்று. 1891-ஆம் ஆண்டில்தான் இச்சங்கத்தின் பெயர் 'கிறித்தவ இலக்கியச் சங்கம்' என மாறியது.

கல்விப் பணியும் சமயப்பணியும் குறிக்கோள்களாக இருப்பினும் மொழிப் பணியும் இவற்றுடன் சேர்ந்து கொண்டது. ஏறத்தாழ முக்கிய இந்திய மொழிகள் அனைத்திலும் நூல்களையும் பத்திரிகைகளையும் முதன் முதல் அச்சிட்டு வெளியிட்டு நாட்டின் கல்வி, சமய மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு இது வித்திட்டது. இனிய எளிய நடையில் நூல்களையும், வெளியீடுகளையும் வெளியிட்டு, அவை மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வழி செய்தது. அத்துடன் ஆசிரியர்களுக்கான பாடத்திட்டங்களை வகுத்து அதற்கேற்பப் பாட நூல்களை எழுதியும் வெளியிட்டது. பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக் கழகங்கள் தோன்றிய காலத்தில் இச்சங்கமும் தோன்றியதால், உயர் கல்வித் தொடக்க முயற்சியில் பங்குபெறும் நல்வாய்ப்பும் இச்சங்கத்திற்குக் கிட்டியது.

1914-ஆம் ஆண்டு வெளியான ஓர் அறிவிப்பின்படி இச்சங்கம் ஐம்பத்தைந்து ஆண்டுகளில் 500-க்கும் மேற்பட்ட வெளியீடுகளை, 22 மொழிகளில் வெளியிட்டது என்றால் இதன் அயராப் பணி நன்கு விளங்கும். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, வங்காளம், உருது, மராத்தி, குசராத்தி, ஒரியா, சிங்களம், பர்மீயம் ஆகிய மொழிகள் முக்கிய இடம் பெற்றிருந்தன.

இத்தகைய சிறப்பினையுடைய இச்சங்கத்தை உருவாக்கி வளர்த்த பெருமை ஸ்காட்லாந்து நாட்டைச்



புத்தகமண்டபத்தின் ஒரு தோற்றம்

குமரன்

# நூற்றாண்டாகத் தொடருகிறது!

சேர்ந்த டாக்டர் ஜான் மர்டாக் என்பவரையே சாரும். இவரே இச்சங்கத்தின் முதல் பொதுச் செயலாளராக நாற்பது ஆண்டுகள் நற்பணியாற்றி வந்திருக்கிருர். இவரால் அமைக்கப்பட்ட துண்டு வெளியீட்டுச் சங்கங்கள் இன்று இந்தியாவெங்கும் பரவியுள்ளன.

இந்தியாவைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய தொகுப்பு நூலை (Indian Year Book) முதன் முதலாக வெளியிட்டவர் டாக்டர் ஜான் மர்டாக்.

இந்த இலக்கியச் சங்கத்தின் ஒரு அங்கமாக இருப்பது இப்போதுள்ள டயோசிசன் அச்சகம். இது முதலில் எஸ்.பி.சி.கே. அச்சகம் என்ற பெயரில் இருந்தது. இந்த அச்சகம் வரலாற்றுப் பெருமையுடையது.

1760-ஆம் ஆண்டில் வேப்பேரியில் உருவாகி இந்திய அச்சுத் தொழில் வரலாற்றில் இது முக்கிய இடம் வகித்து வருகிறது. இதில் பணியாற்றியவர்கள் இன்று இந்தியாவெங்கிலும் உள்ளனர்.

அனைத்திந்திய மொழிகளிலும் மட்டுமின்றி பாரசீகம், ஐரோப்பிய மொழிகளிலும் அச்சுக்கள் உள்ள இந்த அச்சகம் 114 ஆண்டுகளாகப் பணிசெய்துவரும் ஒரு பழம்பெரும் அச்சகமாக விளங்கி வருகிறது.

கேரள மாநிலத்தில் இதன் கிளையாக ஒரு புத்தகாலயம் இருக்கிறது. அது மலையாள மொழியில் நூல்களை வெளியிட்டு வருகின்றது. கோவை, கொடைக்கானல், திருச்சி, மதுரையிலும் இதன் கிளைகள் செயல்படுகின்றன, ஐதராபாத்தில் தெலுங்கு மொழி நூல்களை வெளியிடுகிறது, ஒரு புத்தகாலயம்.

எல்லாவற்றிற்கும் தாயாக இருந்து சிறப்பாகச் செயல்பட்டு வரும் இந்தச் சங்கம்தான், முதன் முதலில் குழந்தை நூல்களையும் வெளியிட்டுள்ளது. ராபின்சன் குருசோ போன்ற சிறுவர் நூல்களோடு சிறுவர் சிங்கார வனம், பூர்வீக கிரேக்கரின் சித்திரப் படச் சரிதைகள், இயேசுவின் இளமை, முத்து சிற்றுயிர் முதலிய அற்புத ஜந்துகள் போன்ற சிறுவர் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

எந்தப் பதிப்பகமும் வெளியிடாத அளவுக்கு ஆயிரக்கணக்கான நூல்களை வெளியிட்டுள்ள இதுவே திரு. எச்.வி. கிருஷ்ணப்பிள்ளையின் 'இரட்சண்ய யாத்திரிகம்' என்னும் நூலை முதன் முதலாக வெளியிட்டது.

புத்தகவெளியீட்டில் ஒரு புரட்சியை உண்டாக்கிய இது 'நண்பர் வட்டம்' என்ற அமைப்பின் மூலம் இலக்கியப் பணியையும் ஆற்றி வருகின்றது. 1969-ல் தொடங்கப் பெற்ற இது, ஆண்டுதோறும் தமிழர் திருநாளின்போது இரு நாட்கள் எழுத்தாளர்-வாசகர் கருத்தரங்கினை சிறப்பாக நடத்தி வருகின்றது. இது வரை ஐந்து கருத்தரங்குகளை நடத்தி, கருத்தரங்குகளில் ஆற்றப்படும் சொற்பொழிவுகளை நூலாகவும் வெளியிட்டிருக்கின்றது. தமிழ் நாவல்கள் சிறு கதைகள், கதை பிறந்த கதை, இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன், விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்களின் கருப்பொருள்களும்— போங்கும், தமிழ் நாவல்களில் மனித விமோசனம் போன்ற தலைப்புகளில் நடத்தப்பட்ட கருத்தரங்குகள் சிறுகதை, நாவல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கின்றன. கருத்தரங்குகள் தவிர அவ்வப்போது இலக்கியக் கூட்டங்களையும் இது நடத்தி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் ஒரு தூண்டுகோலாய் விளங்கி வருகின்றது.

இவ்வாறு புத்தகப் பணியோடு, தமிழ் இலக்கியப் பணியையும் செவ்வனே ஆற்றி வருகிறது இச்சங்கம்.

—பி.வி.ஜி.



கருத்தரங்கில் ஒரு காட்சி

# வாழும் முறைக்கு....!

**இல. பழனியப்பன்.**

பண்பாடு பற்றி அறியாதவர்களை இன்றைய நாட்களில் காண்பதரிது. பண்பாடுபற்றிப் பேசாத நாளில்லை. பேசாத நாடில்லை. உலகெங்கும் ஒரே பண்பாட்டைக் காண்பதரிது. ஏன், ஒரே நாட்டிலே கூடப் பண்பாடு பல்வேறுபட்டவைகளாகத் திகழ்கிறது. இதுகாறும் பண்பாடு பற்றிப் பேசியோர், எழுதியோர் அனைவரும் தனிப்பண்பாட்டைப் பற்றியே எடுத்து மொழிந்துள்ளனர். பண்பாடு பல்வேறாக இருப்பினும் அனைத்திற்கும் பொதுவாகச் சில அடிப்படைக் கோட்பாடுகள் பொதுத்தன்மைகள் உண்டு என்று உலகுக்கு உணர்த்தியவர்கள் சமூகவியல் அறிஞர்களே (Socialogists) ஆவர்.

மனிதன் விலங்குகளைப் படித்தான்; வானிலே வட்டமிடும் வண்ண நிலாவிலே உலா வந்தான். பறவைகளின் பான்மையினைப் படித்தான். அனைத்துத் துறையையும் ஆராய்ந்த பின்னர் இறுதியாகத் தன்னைச் சுற்றிய உலகைப்பற்றி எண்ணத் தொடங்கினான். இந்த விழிப்புணர்வே சமூக அறிவியற் கலைகளின் தோற்றத்திற்கு அடிப்படையாகும். சமூக அறிவியற் கலைகளுக்குச் சிகரம் வைத்தாற் போலுள்ள கூறு பண்பாடு. எந்த இனமும், மொழியும், நாடும் பண்பட்டாலொழிய நாகரிக வளர்ச்சி ஏற்படாது. நாகரிகத்தின் அச்சாணியே பண்பாடு. தனி மனிதனையும் அவனது கூட்டு வாழ்வையும் அறிய அடிப்படைக் கருவியாக அமைந்துள்ளது பண்பாடு ஒன்றே எனில் மிகையாகாது.

பண்பாடு என்றால் என்ன? என்று ஆராய்கின்றபோது பல திறப்பட்ட விளக்கங்கள் நம்முன் படைக்கப்படுகின்றன. பொதுவாகச் சொல்லப்படுகின்ற பண்பாட்டு விளக்கங்கள் குழப்பந் தருபவையாகவே அமைந்துள்ளன. காட்டாக நாம் ஒரு குறிப்பிட்ட மனிதனைப் பண்பாடுற்றோர் என்றும், மற்றொருவரைப் பண்பாடற்றோர் என்றும் கூறுகிறோம். நற்செயல்களும், நற்பண்புகளும் அமைந்தவரைப் பண்பாடுற்றோர் என்றும், தீச்செயல்களும் தீய பண்புகளும் கொண்டவர்களைப் பண்பாடற்றோர் என்றும் பாகுபாடு செய்கிறோம். ஆனால் பல்வேறு வகைப்பட்ட பண்பாட்டைப் பெற்றிருந்த போதிலும்கூட, எல்லா மனிதர்களும் குழுக்களும் பல்வேறு வகைப்பட்ட பண்பாட்டைப் பெற்றிருந்த போதிலும்கூட, எல்லா மனிதர்களும் பண்பாடுடையோர் என்பதே சமூகவியல் அறிஞர்களின் கருத்து. ஆகவே ஈண்டு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் சில வழி முறைகளே பண்பாடாகிறது. அந்தச் சமுதாயம் அதன் உறுப்பாகிய ஒவ்வொரு தனி மனிதனிடமும் சில குறிப்பிட்ட சூழல்களில் சில குறிப்பிட்ட பண்புகளையும் செயலுணர்வுகளையும் எதிர்பார்க்கிறது. அந்தக் குறிப்பிட்ட செயல்கள் அச்சமுதாயத்தின் பொதுச் சொத்தாகிய பண்பாடாகக் கருதப்படுகிறது. நம் சமுதாயத்தில் சில சமூகப் பழக்க வழக்கங்கள் நடைமுறையில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. காட்டாக உணவுமுறைகள், திருமண முறைகள், உடை அமைப்புக்கள் இன்ன பிறவற்றைக் கூறலாம். இவ்வாறு வாழ்வின் இன்றியமையாக் கூறுகளில் பின்பற்றப்படும் பழக்கங்களின் ஒருமைப்பாடே பண்பாட்டின் அடித்தளமாகும்.

''பண்பாடு (Culture) என்ற கருத்துச் சொல்லில் அடங்கும் முக்கிய பான்மைகளும் அம்சங்களும் எவை? 'மனித ஆளுமை' (Human Personality) என்பது ஓர் ஆளின் முழுஇயல்பு, பான்மை, திறமை முதலியவற்றைக் குறிப்பது போலப் பண்பாடு என்பதும் மக்களுடைய சிந்தனை, சொல், செயல், கருவிகள் ஆகிய அனைத்தின் முழுமையாகும். இயற்கையாக -பிறவியில் பெறுவதல்ல. எண்ணித் துணிந்து ஏற்றுக் கொள்ளுவது மீண்டும் மீண்டும் செய்து பதமாகியது. அவை கற்றுப் பயின்றமைந்த செயல்முறைகள்; வாழ்க்கையில் அது தொடர்ந்து மாறுதல் அடையும் போக்குடையது. ஒரு மக்கட் தொகுதியின் உறுப்பினர்கள் தங்களுக்குள் பொதுவாக அனுசரிப்பதும், தங்களை வழிப்படுத்திக் கொள்ளும் 'ஆற்றுப்படை' யாகக் கொண்டதுமாகும். பின் சந்ததிகளுக்குப் பாரம்பரியங்களுமாகும்.

மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கருவிகளின் உதவிகளைத் தேடிய நாள் முதலே பண்பாடு தோன்றியதாகக் கொள்ளலாம். பண்பாடு என்பது தொடர்ந்து மாறும் தன்மைத்து என்பதும், நம்மால் கற்றுக் கொள்ளப்படும் செயல் என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. இவ்வாறு அறியும் ஒழுக்கங்களின் (Learned behaviour) மூலமாகத் தோன்றும் நோக்கங்கள் (Attitudes) மதிப்பீடுகள் (Values) அறிவு (Knowledge) காட்சிப் பொருள்கள் (Material objects) ஆகியவையும் பண்பாட்டின் கூறுகளேயாகும். இவைகள் யாவும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள மனிதர்களிடையே மாற்றிக் கொள்ளப்பட்டும், பங்கிடப்பட்டும் வருகின்றன. எனவே இச்செயல்களும் பண்பாட்டினுள் அடங்கும். ஆக, வாழ்வின் பொதுப்படைக் கூறுகளில் உள்ள ஒருமைப்பாடு, பண்பாட்டின் பொது அடித்தளமாக உள்ளது என்பது ஐயந்திரிபற்ற உண்மை.

தனிப்பண்பாடும் பொதுப் பண்பாடும் வேறுபட்டவையாகும். தனிப்பண்பாடே (Specific Culture) பொதுப் பண்பாட்டிற்கு (General Culture) அடிப்படை; ஏனெனில் தனிப்பண்பாட்டை வைத்தே பொதுப்பண்பாட்டை நிறுவ வேண்டும். மக்களை அறிந்து கொள்ள இருவகைப் பண்பாட்டை அறிதல் அவசியம்.

சில நேரங்களில் பண்பாடும்

சமுதாயமும் ஒன்ருகப் பேசப் படுகின்றன. இந்த இரண்டிற்கு மிடையேயுள்ள வேறுபாட்டை பற்றி உணராவிடில், பண் பாட்டுப் பாகுபாட்டில் குழப் பமே மிகுதியாகும். ஆனல் பண்பாடும், சமுதாயமும் ஒன் ருேடொன்று மிக நெருங்கிய தொடர்புள்ளன என்பதை யும் மறப்பதற்கில்லே. சமுதாய மில்லாமல் பண்பாடில்லே. பண் பாடில்லாத சமுதாயமில்லே. பண்பாடு மக்கள் சமுதாயத்தி லிருந்து பிரிக்க முடியாத ஒன்று. பல்வேறு தனிப்பட்ட மனிதர் களே ஒரு குழுவாகி, சமுதா யத்தை அமைக்கிருர்கள். அக் குழுவின் பொது நடத்தையே பண்பாட்டைப் படைக்கிறது.

எல்லாப் பண்பாடுகளும் பல் வேறுபாடுகளும், சில ஒருமைப் பாடுகளும் கொண்டவையே. இன்றைய நாட்களில் ஒவ் வொரு மனிதனுக்கும் எல்லாப் பண்பாடுகளேயும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற அறி வியல் ஆர்வம் வளர்ந்துள்ளது. பல்வேறு பண்பாட்டிற்கு இடை யேயுள்ள இந்த வேறுபாடு எவ் வளவு தூரத்திற்குச் செல்லும்? ஏன் இந்த வேறுபாடுகள் ஏற் படுகின்றன? பல்வேறு பண் பாட்டிற்கிடையே ஒருமைப் பாடுகள் எவையேனும் உளவா? என்பன போன்ற அறிவியல் ஆர்வக் கேள்விகளே, பண் பாட்டு ஒருமைப்பாட்டையும், வேறுபாட்டையும் அறிய ஏது வாய் அமைகின்றன.

பொதுவாக பண்பாட்டு வேறுபாடு, கீழ்க்காணும் நான்கு துறைகளில் இருப்பதாகச் சமூக வியல் அறிஞர்கள் கருதுகின்ற னர்.

(1) பால், திருமண, குடும்ப அமைப்புக்களிலுள்ள வேறு பாடுகள் (Variabilities in Sex-marriage family structure).

(2) சமயங்களுக்கிடையே யுள்ள வேறுபாடுகள் (Variabilities among religions).

(3) அரசாங்க அமைப்புக் களிலுள்ள வேறுபாடுகள் (Variabilities in Governmental Systems).

(4) பொருளியல் தன்னிறைவு களிலும், எண்ணங்களிலும் உள்ள வேறுபாடுகள் (Variabilities in economic persuits and ideas).

குடும்ப அமைப்பிலும் திருமண முறைகளிலும் உள்ள வேறுபாடுகள் பலதிறத்தன. மணமகளேத் தேர்ந்தெடுப்ப திலேகூட வேறுபாடுகள் உள் ளன. குடும்ப நிருவாகங்களில் கூட சில சமுதாயங்களில் தகப்பனேத் தலைமையாகக் கொண்ட குடும்பமும் (Patriarchal family) வேறு சில வற்றில் தாயைத் தலைமை யாகக் கொண்ட குடும்பமும் (Matriarchal family) உள் ளன. இவ்வாறு குடும்ப அமைப்பு, மணமுறை, பால் உறவு, ஆகியவற்றில் ஒவ் வொரு பண்பாடும் மிக்க மாறு பாடு கொண்டு திகழ்கிறது.

அடுத்த நிலேயில் சமயங் களுக்கிடையேயுள்ள மாறு பாட்டினே நோக்கின் அவை எண்ணிறந்தனவாம். ஒவ் வொரு பண்பாடும் தனக்கென ஒரு சமயத்தைக் கொண் டிருப்பதோடு, சமயநெறிகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற் றிலும் வேறுபாடு கொண்டு திகழ்கிறது.

உலகெங்கும் அரசாங்க அமைப்பு முறைகளில் உள்ள வேறுபாடுகள் நாம் நன்கறிந்த ஒன்ருகும்.

அவ்வாறே பொருளியல் கொள்கைகளிலும் அதை அடை யும் வழி முறைகளிலும் ஒவ் வொரு சமுதாயமும் வேறுபடு கிறது. இவ்வாறு பண்பாடு, பல்லாற்ருனும் வேறுபாடு கொண்டு திகழ்கிறது.


பண்பாடு வேறுபாட்டிற் குரிய காரணங்களே ஆய்கின்ற பொழுது பல காரணங்களேக் காண முடிகிறது. பூகோளச் சூழ்நிலே (Geographical environment) என்ற காரணம் ஓரள விற்கு உண்மையெனினும் இதுமட்டுமே போதுமான காரணமாகாது. ஏனெனில் மனிதன் எல்லாவித தட்ப வெப்பநிலேயிலும் வாழ,மாற்று முறைகளேப் (Alternatives) பெற்றிருக்கிருன். அவ்வாறே இனப்பாகுபாடும் சரியான காரணமாகப் படவில்லே. ஏனெ னில் இனவளர்ச்சி ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு சமு தாயத்திலும் மாறுபடுகிறது. இது நாம் உலக வாழ்வில் காண்கின்ற பேருண்மை.

பின் ஏன் பண்பாட்டில் வேறு பாடு ஏற்படுகிறது? மனிதனின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளான உணவு, உறை யுள் இவற்றை நிறைவேற்றப் பல்வேறு வழிகள் மனிதனல் உலகெங்கும் மேற்கொள்ளப் படுகின்றன. இவ்வாறு தன் சிக்கல்களேத் தீர்க்க மனிதன் காலத்துக்காலம் கண்டுபிடித்து கொண்டிருக்கும் புதிய புதிய வழிமுறைகளே பண்பாட்டு மாறுபாட்டிற்குக் காரணம்


## இதோ இன்னொரு சமதர்ம நல்வாழ்வுத் திட்டம்.

கண்ணொளி வழங்குதல், கைரிக்ஷாக்களுக்குப் பதில் இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குதல், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தல், குடிசைகளே மாற்றி குறைந்த வாடகையில் நல்ல வீடுகள் அளித்தல், அரிசனங்களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைத்தல், போன்ற ஏழை மக்களுக்கான சமதர்ம நல்வாழ்வுத் திட்டங்களேத் தொடர்ந்து நடத்தி வருகின்ற நமது தமிழக அரசு இன்னொரு சமதர்ம நல் வாழ்வுத் திட்டத்தை இப்பொழுது அறிவித்துள்ளது.

கைகால் ஊனமுற்ருேர், கண்கள் பழுதடைந்தோர், ஊமையர்களாக இருப்போர் ஆகிய அங்கீனர்களில் படித் தவர்களுக்கு வேலே வாய்ப்பும், அவர்களில் படிக்காதவர் களுக்கு அரசின் சார்பில் நிவாரண உதவியும் அளிப்பது பற்றித் திட்டம் தயாரிப்பதற்காக தமிழ் நாட்டில் இத் தகைய உடல் ஊனமுற்ருேர் தொகையை உடனடியாக கணக்கு எடுக்கும்படி அரசு ஆணே பிறப்பித்திருக்கிறது.



என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

அவ்வாறே பல்வேறு பண்பாடுகளுக்கிடையேயுள்ள ஒருமைப்பாடும் (Uniformity மறைக்கவோ, மறுக்கவோ முடியாத ஒன்றாகும். குடும்ப அமைப்பு முறைகளில் வேறுபாடு இருந்தாலும் பொதுவாக திருமணம், குடும்பம் என்ற வகையில் எல்லாப் பண்பாடுகளும் ஒருமைப்பாடு கொண்டு திகழ்கின்றன. அவ்வாறே அரசியல் அலுவல்கள், அறிவுத் துறைகள், பொருளியல் அமைப்பு, பொழுதுபோக்கு, கலை ஆகியவற்றின் பொது அமைப்பிலே எல்லாப் பண்பாடுகளும் ஒருமைப்பாடு கொண்டிருப்பது 'உண்மையே.

இவ்வாறு பண்பாட்டைப் பல்வேறு கூறுகளாக்கிப் பகுத்துணர்வதால் பல்வேறு நன்மைகள் உள்ளன. இதன் மூலமே நாம் எல்லாப் பண்பாட்டையும் புரிந்து கொள்ள (Cultural understanding) முடியும். பண்பாட்டு வேறுபாடுகளையும் ஒருமைப்பாடுகளையும் உணர்வதன் மூலமே அவரவர் பண்பாட்டின் உயர்வு தெரியவரும் பல்வேறு தனிப்பட்ட பண்பாடுகளே ஓர் உலகப் பண்பாட்டை (Universal Culture) ஏற்படுத்த வல்லது. பண்பாட்டைச் சட்டத்தினால் ஒரு சமுதாயத்தில் உருவாக்க முடியாது. அது இயற்கையாக வாழ்க்கை முறையில் மட்டும் உருவாகும் தன்மை வாய்ந்தது. ஆகவே பண்பாடு, உலக வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்வதற்கு, பிறர் வாழும் வாழ்க்கையை மதிப்பதற்கு, பிறருடைய கருத்துக்களுக்கும், வாழும் முறைகளுக்கும் மதிப்புக் கொடுப்பதற்கு வழி கோலுகிறது.

## தொழிற்பயிற்சியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு.

கடந்த டிசம்பரில் நடைபெற்ற தொழிற் பயிற்சிக் கழகங்களுக்கான 10-வது அனைத்திந்திய தொழில் திறன் போட்டியில் ‘தொழிற் பயிற்சியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடே’ என முடிவு செய்யப்பட்டுள்ளது. போட்டிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். எனவே, இதற்குரிய குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## சிறு சேமிப்பில் முன்னணி மாநிலம்

சிறு சேமிப்பில் இந்தியாவில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இதுவரை 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் சிறு சேமிப்பு நிதி மூலம் கிடைத்துள்ளது.




## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், நெ. ஜி-1628. படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
' தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும் '
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர வினியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !

## 4. ஆடிவந்த பொற்பாவை

ஆடிவந்த பொற்பாவையாக -தேடி வந்த பூந்தென்றலாக- பாடிவந்த பூஞ்சிட்டாகத் தோன்றினாள் அன்னக்கொடி!

அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்தான் வீரமணி; பார்த்துக் கொண்டேயிருந்தான். கண்ணுக்குக் கண்ணாகக் காணும் இக்காட்சி சொப்பனம் அல்லவே? சுந்தரக் கனவிலே சுந்தரி அன்னக்கொடியைக் கண்டு ரசித்து, பின்னர், கனவு கலைந்ததும் அன்னத்தைக் காணாமல் ஏங்கிப் புழுங்கித் தவித்த நாட்கள் அவன் வரை எத்தனை எத்தனையோ இருந்தது உண்டு. ஆனால், இப்போது அவன் கனாக் காணவில்லை. ஆனாலும், அவனுடைய கனவுக் கிளி பொற்கனவாகிக் கண் சிமிட்டிக் கொண்டேயிருக்கின்றாள்! பிரத்தியட்சமான இவ்வுண்மை அவனுக்கு உயிரளித்திருக்கும்; உயிர்ப்பளித்திருக்கும்.

ஆம்.

அவள் அவனைப் பார்த்தாள்; பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவன் அவளைப் பார்த்தான்; பார்த்துக் கொண்டேயிருந்தான்.

கண்களும் கண்களும் கலந்தன; பேசின.

கண்கள் இணைசேர்ந்து, இணை சேர்த்துப் பேசிவிட்டால் மட்டும் போதுமா? வாய்ச் சொற்கள் பயன்பெற வேண்டாமா?

''அன்னம், வந்த காலோட இங்கிட்டே தவம் செஞ்சுக்கிட்டு இருக்கியே? உள்ளே வா,'' என்று அழைத்தான் வீரமணி.

''வர்றேனுங்க, அத்தான்!''

''தேடி வந்தவனை ஓடிவந்து 'வா'ன்னு கூப்பிடலையே அத்தான்காரன் என்கிற சடனையிலேதான் நீ இவ்வளவு நேரமாய்க் காத்திருந்தியாக்கும்?''

அவள் விநயமாக இளநகை சிந்தினாள். ''ஒண்ணுக்குள்





ளாற ஒண்ணான நம்பளுக்குள்ளே இம்மாதிரியான வளமை வாடிக்கையெல்லாம் தேவையில்லேதான். ஆனாலும் உங்களையும் என்னையும் அந்நியம் அசலாட்டம் ஆக்கி வச்சு, கண்ணாமூச்சி ஆடிக்கிட்டு இருக்கிற நம்பளோட குடும்ப விவகாரத்துக்கு ஊடாலே, உங்க வீட்டுக்கு நானே வலிய வந்திருக்கிற இந்த நிலவரத்திலே, வந்த பொண்ணை 'வா'ன்னு ஒரு பேச்சுக் கூப்பிடாட்டி, ரோசம் தாங்குதுங்களா?'' என்று விநயமும் குறும்பும் கூட்டிச் சொன்னாள். மஞ்சள் பூசிய வதனம் பெருமையோடு விளங்கியது. நாணம் பூசிய நயனங்கள் கருவத்தோடு பொலிந்தன. சாதி மல்லி கமழ்ந்தது.

ஓவியத்தை ரசிக்கத் தெரிந்தவனுக்கு உயிரோவியத்தை ரசிக்கத் தெரியாதா? ''என் அன்னத்தைப் பத்தி நான் படிக்காததா? உன்னைக் கண்டபடியும்தான் அப்பாகிட்டே சொல்லிட்டு வந்திட்டேனே?'' என்று கூறினான். பயந்த சுபாவம் படைத்தவன் மாதிரி 'பாவலா' காட்டிவிட்டு, நகைத்தான். அப்புறம், "காய்ந்த எச்சில் கையைக் காட்டி உன் அத்தான் உன்கிட்டே பொய் பேசுவேனா? தோசை சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். காசி பச்சைக்கொத்தமல்லித் துவையல் வச்சிருந்தார். அதைக் கண்டதிலேயிருந்து உன்னைப் பற்றின நினைப்பிலேயே போராடிக்கிட்டிருந்தேன். அப்பத்தான் நீ வந்திருக்கே!'' என்று விளக்கினான்.

''ஆத்தாடியோ! இப்பத்தானா பலகாரம் சாப்பிட்டீங்க! உச்சிக்கு வந்திடுச்சே சூரியன்?' என்று பதறினாள் அன்னம்.

''நான் என்ன செய்யட்டும்? என்னைப் பெற்ற ஆத்தாளோ கண்ணை மூடிக்கிட்டாங்க. எனக்காகக் காத்துகிட்டு இருக்கிற உற்றவளோ கண்ணை மூடிக்கிட்டு இருக்கா!'' என்றான்; ஆற்றாமையோடும் ஆறாத் துயரத்தோடும் வார்த்தைகள் வெளி வந்தன.

அவன் வேதனை அவள் உள்ளத்தைத் தொட்டிருக்க வேண்டும். ''என்னை என்ன செய்யச் சொல்லுறீங்க, அத்தான் ? வேளை கூடிவந்தா, நான் ஓடி வந்து உங்க காலடி நிழல்லேயே மண்டிபோட்டு ஒண்டியிருந்துக்கிட்டே, மம்மலிலேயே உங் ளுக்குச் சுடச்சுட தோசையும், உறைக்க உறைக்க பச்சைக் கொத்தமல்லித் துவையலும், இனிக்க இனிக்கக் காப்பித் தண்ணியும் தந்துப்பிட மாட்டேனுங்களா?'' என்று உருக்கமாகப் பேசினாள், அன்னம்.

இப்போதைக்கு மூச்சை நெட்டித் தள்ளுவது ஒன்றுதான் அவனுக்கு நேர்பாதையெனத் தோன்றியது. ''சரி, வா உள்ளே! அப்பன்காரருக்கு மேலுக்கு முடியல்லே!'' என்றான்.

அன்னக் கொடி பதறிப் போனாள். ''அயித்தை புருச

னுக்கு மேலுக்கு என்னுங்க வந்திச்சு, அத்தான்? இம்மாம் பொழுதுக்குச் சொல்லவே இல்லீங்களே?'' என்று வருந்தினுள்.

''அப்பாருக்கு உடம்பு சரியில்லேன்னு கேள்விப்பட்டுத்தான் விசாரிக்க வந்திருக்கியோன்னு நான் நினேச்சேன்!''

''அந்தத் துப்பே காதுக்கு எட்டலீங்க. நீங்க உங்க படிப்பிலேயும் பரீட்சையிலேயும் நல்லதனமாய்த் தேறிவிட்டதாக ஆரியப்பூ தான் காதிலே ஓதுச்சுங்க. இங்கே கமுக்கமாய் வந்து குதிக்கிறதுக்கு காலம் பறவே பிடிச்சுத் துடிச்சேனுங்க. அகிலாண்டத்தையும் அமிர்தத்தையும் கேட்டுக்கிடுங்க! செத்த முன்னுடிதான் எங்க அப்பன்காரப் புண்ணியவானேடை தலே மறைஞ்சுது. ஊம், நடங்க அத்தான்!'' என்று துருசுப்படுத்தினுள் சிங்கப்பூர்க்காரர் மகள். ''உதயத்திலே, நான் தண்ணி இறைச்சுத் திரும்பையிலே சாலேயோரத்திலே உங்களே எட்டத்திலே வச்சுக் கண்டப்போ, எனக்கு ஒரு விசயமும் தெரியாதுங்களே!'' என்று குறிப்பிடவும் தப்பவில்லே வீரமணியின் முறைப்பெண்.

ஆதிமூலத்தேவருக்கு காப்பியில் சூடு பறக்க வேண்டும். இல்லேயேல் அவரது பொறுமை பறந்துவிடும். காசி, சாயத்துண்டை எட்டாக மடித்து, அதில் காப்பிக் குவளேயை வைத்துக் கையில் ஏந்தி வந்து நீட்டிய சடுதியிலேயே அதை வாங்கி 'மடமட' வென்று குடிக்க ஆரம்பித்த அவர், 'நைலக்ஸ்' புடவையின் சலசலப்பும் சரிகை வேட்டியின் படபடப்பும் முடங்கிக் களித்திட்ட ஓசை கேட்டுப் பின்புறம் திரும்பிப் பார்த்து விட்டு, மீண்டும் தம் கருமத்தில் கண் ஆனுர். சொட்டு மிச்சம் வைக்காமல் பருகித் தீர்த்த பின்னர்தான், அவர் ஏப்பம் விட்டார்; பார்வையை நிமிர்த்திஞர். காப்பியின் சூடு அடிவயிற்றில் இன்னமும் சுட்டுக்கொண்டிருந்தது. சூடு என்ருல் அதில் அவருக்கு ஓர் அலாதி ருசி தான்!

''அம்மான் மகளும் அயித்தை மகனும் இம்மாம் பொழுதுக்கா ரகசியம் பேசிக்கிட்டு இருக்கோணும்?''

கேள்வியில் சூட்டைக் காண்பிக்காமல், ஆனுல், கேள்விக்கு சூடுகாட்டிக்கேட்டார் தேவர். அன்னக்கொடியையும் வீரமணியையும் தமக்கே உரித்தான புதிர்நோக்குடன் ஊடுருவித் துழாவிஞர் அவர்.

தந்தைக்குத் தந்தையாக மட்டுமல்லாமல், தாய்க்குத் தாயாகவும் விளங்கித் தன்னே வளர்த்து ஆளாக்கிய அன்புத் தந்தைக்கு இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடவா உரிமை இல்லே? எனவே, உரிமைப் பிரச்சினே எதையும் கிளப்பத் தயாராக இல்லே அவன்—வீரமணி.

ஆனுல், அன்னம், தன் அத்தையைக் கொண்டவரின் விஞவை அவ்வளவு லேசாக எடுத்துக் கொள்ள ஒப்பமாட்டாள். மகிழ்ச்சியின் ரேகைகள் மறையத் தொடங்கின. ''ஊர் உலகத்துக்கோ, இல்லாட்டி, உங்களுக்கோ தெரியாத எந்த ரகசியத்தை நானும் என்னேடை அத்தானும் பேசிக்கிடப்போருேமுங்க?'' அப்படியே புது ரகசியத்தைப் பேசிக்கிட்டாலும், அதிலே தப்பு கிப்பு கிடையாதுங்களே? அயித்தை மகனும் அம்மான் மகளும் தானுங்களே பேசிக்கிட்டோம் மாமா?'' என்று தர்க்கரீதியான பேச்சால் மடக்கினுள். நேர்கொண்ட பார்வையால் தன் அத்தையின் கணவரை அளந்தாள் கன்னிப்பூ.

அன்னத்தின் துணிச்சல் வீரமணிக்குப் பிடிக்கவே செய்யும். பரிசுத்தமான நேர்மையின் பலத்தோடு ஊக்கமாகப் பேசுகிருள் அம்மான் மகள். நியாயம்தான்! ஆனுல், அப்படியே உள்ளது உள்ளபடி, அன்னத்தின் பேச்சை நியாயத்தின் அடிப்படையில் அப்பா எடுத்துக்கொள்வார் என்பது என்ன நிச்சயம்?

அப்பாவுக்கு முகம் சுண்டி விட்டது. தீவிரமான சிந்தனேயில் ஈடுபட்டவராக அவர் காணப்பட்டார். கறுமை படிந்த கனத்த உதடுகளில் ஒரு நெளிவு தோன்றி மறைந்தது. அன்னம், மெய்யாகவே நீ ஒரு புதுமைப்பொண்ணுதான்! '' என்று புகழ்ந்து பெருமூச்செறிந்தார்.

அந்தப் பாராட்டை அவள் அங்கீகரித்தாளோ, என்னவோ?'' அது கிடக்கட்டும். உங்களுக்கு உடம்பு



இப்போ சரிப்பட்டிடுச்சுங்களா? அயித்தை மகன் சொல்லக் கேட்டதும் எனக்கு மூச்சே நின்னுப்பிடும் போல இருந்திச்சுங்க,'' என்று கவலே தெரிவித்தாள் அன்னம்.

''அன்னம், உன்னேடை மூச்சு பத்திரம்!..என் மூச்சு இன்னம் கொஞ்ச நாளேக்கு நிற்கவே நிற்காது. இந்தக் குடியிருப்பு மண்ணிலே நான் செஞ்சுமுடிச்சாக வேண்டிய கடமைகள் எம்புட்டோ நிலுவை நிற்குது. தர்மராசா, ரெண்டொருத்தர் மாதிரி தட்டுக்கெட்ட புள்ளி இல்லே. அவன் நல்லவன். பேரிலேயே தர்மத்தையும் ராசா

வையும் கோத்து வச்சிருக்கிற புண்ணியவான் அவன், என் மனசு அவனுக்கு விளங்காது. ஆகச்சே இப்போதைக்கு அவன் என் பக்கம் தலைவச்சுக்கூடப் படுக்க மாட்டான்!'' —பெரியவரின் குரல் சிலும்பல் தட்டியது.

வீரமணியின் மன உணர்வுகள் நெகிழ்ந்தன.

அன்னம் சிரம் தாழ்த்தி மௌனமாகச் சமைந்தாள்.

''தம்பி, இன்னமுமா சாப்பிடலே?'' என்று சமையல்காரர் நினைவுபடுத்தினார்.

''அடேடே!. சாப்பிடப்பா!'' என்றார் தேவர்.

முட்டைத் தோசையையும் மல்லித் துகையலையும் பார்த்தான் வீரமணி. பிறகு அன்னக்கொடியையும் தகப்பனாரையும் நோக்கினான். தோசை சாப்பிடும்படி அன்னக்கொடியை உபசரிக்க மாட்டாரா அப்பா? சில வினாடிகளைச் சோதனைக்கு உள்ளாக்கியபின் ''சும்மா குந்து தோசை கொண்டாரச் சொல்லுறேன். சாப்பிடு அன்னம்'' என்று கோரினான் முறை மச்சான்காரச்சிங்கம்.

அவள் தயங்கினாள்.

வாசற்பக்கம் மேற்கு நோக்கித் திரும்பிய லாரியை நோட்டம் பார்த்த காசி, ''தங்கச்சி, உன் அப்பன்காரர் கண்மண் தெரியாது வீட்டுக்குப் பறந்துக்கிட்டிருக்கார்,'' என்று தாக்கீது கொடுத்தார்.

இனி, நிற்க, நிலைக்க, நாழி ஏது? அன்னம் பரபரப்புடன் நகர்ந்தாள். உரிமையின் உறவு நெகிழ, வீரமணியின் தட்டிலிருந்த எச்சில் முட்டைத் தோசையைக் கிள்ளி, அதை மல்லித் துகையலில் தொட்டுத் துவைத்தெடுத்து, வாயில் போட்டுக்கொண்டாள். ''நான் போயிட்டுவாரேனுங்க மாமா!'' என்று நாணம் பூத்த மரியாதை தூவி விடை கோரினாள் அன்னக்கொடி.

''நல்லது. புறப்படு அன்னக்கொடி!'' என்று தேவர் அமரிக்கையாக விடை கொடுத்தார்.

''போயிட்டு வர்றேனுங்க, அத்தான்!'' என்று 'அத்தானிடம் பயணம் சொல்லிக் கொண்டாள் ராமையாத் தேவரின் செல்வி.

''போயிட்டு வா, அன்னம்!''

ஒற்றைக்கல் மூக்குத்தி ஒற்றைத் தனி விண்மீனாக ஒளி காட்ட, விடைபெற்றாள் அன்னம்.

வீரமணியின் உள்ளம் விம்மிப் புடைத்தது. ''அன்னம்! அம்மான் மகளே அன்னம்!''

நாட்டிற்குச் சரித்திரம் படைக்கச் சரித்திரமாகிவிட்ட செம்மல்களும் நாட்டின் சரித்திரம், காக்க, சரித்திரத்தை உருவாக்கிக்கொண் டிருக்கும் நல்லவர்களும், அதோ, சிரித்துக்கொண் டிருக்கிறார்கள்!


கை ஈரத்தைத் துவாலையில் துடைத்துக் கொண்டான்; சன்னல் ஓரமாகக் குறிச்சியை வசம் கணித்து இழுத்துப் போட்டான்; பதமாக உட்கார்ந்தான்; விசுப்பலகையில் இருந்த தோல் பையை எடுத்தான். லேசாக இருந்தது. தீர்ப்புத் தாள்களின் சுமை மிக மிகக் குறைச்சல்தான். ஆனால், அவை இக்குடும்பத்தை அழுத்திச் சோதிக்கக் காத்திருக்கும் சுமையின் பயங்கரம் அற்ப சொற்பமல்ல. சுமை தாளாமல் மண்டை வலித்தது. பொட்டு நரம்புகள் விட்டுப் போகிறமாதிரித் தெறித்தன. அம்மான் சம்பந்தப்பட்ட சட்டத்தின் தீர்ப்புப் பற்றித் தன் தந்தை அலட்டிக் கொள்ளாமல் 'சிவனே' என்று இருக்கும் போக்கு அவனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. வீங்கின புண் வெடிக்காமல் தப்ப முடியாது. அப்பாவிடம் தீர்ப்பு சம்பந்தமாகச் சுணங்காமல் பேசியாக வேண்டும். இந்தக் கண்டத்தைவிட்டு, எப்படித் தப்பிப் பிழைக்கப் போகின்றோம் என்பதற்கும் விளக்கம் வேண்டும். வழி புரிந்துவிட்டால், அப்பால் வழியைக் கடப்பது ஒன்றும் கம்ப சித்திரமல்ல. அவன் முதுகை வாய்ப்பாகச் சாய்த்துச் சாய்ந்து கொண்டான்.

அது அவனது தனி அறை.

தெற்குப் பார்த்த வீடு. இதமான காற்றுக்கு மட்டும் பஞ்சம் இருக்காது.

மின் விசிறி நின்றது.

தூக்கம் சொக்கியது. ஏப்பம் பறிந்தது. தான் எச்சில்படுத்தியிருந்த முட்டைத் தோசையை அன்னம் தொட்டுப் பிட்டுத் தின்று செல்ல, அவள் தீண்டிய மிச்சத்தைச் சொச்சம் வைக்காமல் அவன் ஒரு விசித்திரமான சிருங்கார ரசிகத் தன்மையோடு சாப்பிட்டுத் தீர்த்தானே, அப்பொழுது அது அமிர்தமாகச் சுவைத்திட்ட அருமை பெருமை அவன் அந்தரங்கத்துக்குத்தான் அத்துப்படியோ? மறுக்க முடியாது; மறுக்கவும் கூடாது. மனம் கொண்டதே மாளிகை! அம்மான் மகள் நெஞ்சில் விளையாட, அவளோடு அவன் நினைவில் விளையாட ஊரை மறந்து உலகத்தை மறந்து, மெய்ம்மறந்த சித்திர விசித்திரமும் அவனுடைய அந்தரங்கத்துக்குதான் வெளிச்சமோ? ஆனால் அவனுடைய அம்மான் ராமையாத் தேவர் நினைவில் குறித்து, நெஞ்சில் பாய்ந்தபோது அவன் தன்னையும் அறியாமல் தன்னையும் மீறிய விதத்தில் பற்களை ''நற நற'' வென்று கடித்துக் கொண்டான்!



குலச்சுடரைப் பெயர் சொல்லிப் பாசம் சொல்லி அழைக்கின்றார் முதியவர்.

மடியிலிருந்த மண் ரசாயனம் நழுவுகிறது; பேனா மடியிலிருந்து நழுவவில்லை.

''அப்பா'' என்று விளித்தவாறு, வீரமணி தன் தந்தையின்காலடியில் வந்தமர்ந்தான். தேங்காய்ப்பூத் துண்டைத் தோளில் வாகாகப் போட்டிருந்தான்; 'முண்டா பனிய'னை இழுத்துவிட்டான்; சுருள் முடிகளை ஒதுக்கிக் கொண்டான்.

பெரியவர் ஆதிமூலம் மெள்ள எழுந்தார்; ஊசி குத்தின இடத்தைத் தடவிக் கொடுத்தவராக, திண்டை நகர்த்திச் சுவரோடு சுவராகச் சாய்ந்தார் அவர். புகையிலைச் சிதறல்கள் உணக்கை கூட்டியது. பெற்றெடுத்த அன்புப் புதல்வனை அருமையாகவும் பெருமையாகவும் என்னவோ ஒரு புதிய நம்பிக்கையோடு ஊடுருவிப் பார்வையிட்டார். பின்னர் இருதயப் பகுதியைப் பிசைந்து கொண்டார். ''வீரமணி'', என்று கூப்பிட்டார்.

''சொல்லுங்க, அப்பா!'' என்றான் வீரமணி. சோதனைக்குத் தயாராகும் மாணவனைப்போல, என்னவோ ஓர்

இலட்சியக் குறிப்புடன் அவனும் தன் பங்கிற்கு அப்பாவை ஊடுருவத் தொடங்கினான்; தஞ்சை மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பை வெளியிலே எடுக்கலானான் அவன்.

உறை கிழிக்கப்பட்ட உறைக் கடிதம் ஒன்றை வீரமணி வசம் ஒப்படைத்தார்தேவர். ''சிதம்பரத்தைச் சேர்ந்த லட்சாதிபதி மகள் தமிழரசியைப் பத்தி நீ ரொம்பப் பெருமையாய்ச் சொல்லிக்கிட்டிருப்பியே, அந்தப் பொண்ணு உனக்கு என்னென்னமோ எழுதி அனுப்பியிருக்குது, தம்பி. அதை மறுகா தனியே படிச்சுக்கலாம்'' என்று குறிப்பிட்டார். பின்பு சற்று நேரம் பேச்சு மூச்சு காட்டவில்லை. வீரமணியைமேலோட்டமாகக் கவனித்தார். கிழிக்கப்பட்டிருந்த கடிதத்தின் வாயைச் சலனத்தோடு தடவிக் கொடுத்தபடி சிந்தனைக்கு ஆளாகி 'கம்'மென்றிருந்த தனயனைக் கண்டதும், அவர் கனைப்புச் சத்தம் எழுப்பினார். ''வீரமணி, நீ கையிலே அடக்கி வச்சிருக்கியே அதுதானேப்பா கச்சேரித் தீர்ப்பு நகல்?'' என்று அமைதியைக் கலைத்துக் கேட்டார். கேள்வி அமைதியாகவே ஒலித்தது. ஆனால், கேள்வியில் அமைதி இருக்க 'கடவு' இல்லை

''ஆமாங்க,'' என்று 'சடனை'யை உணர்ந்தும் உணர்த்தியும் சொன்னான் அவன்.

''தீர்ப்பைப் படிச்சிட்டியா?''


''தீர்ப்பை நான் படிக்கிறதாவது? தஞ்சாவூரிலே இதுக்கு எட்டாம் நாள் நீதிபதி தீர்ப்பைப் படிச்சிட்டாருங்களே, அப்பா?'' என்றான் வீரமணி; குறும்புத்தனம் வாய்க்குள்ளாகவே சுழித்தது.

தேவருக்குத் தம் மைந்தனின் பொடி தெளித்த பேச்சு விளங்காமல் இல்லை. ''இப்பைக்குத் கைக்கு மெய்யாய் வச்சுக்கிட்டிருக்கியே தீர்ப்பு நகல். அதைப் படிச்சிட்டியான்னுதான் நான் உன்னைக் கேட்டேன்,'' என்றார். மடங்கவும் மடக்கவும் தமிழுக்கும் தெரியும்; அவருக்கும் தெரியும்

''தீர்ப்பைத்தான் தஞ்சாவூரிலேயே படிச்சுப் பார்த்திட்டேனுங்களே!'' மண்வளம் படித்தவன் வீரமணி, மனவளமும் பழகியவன். வீசிக்கொண்டிருக்கும் புயலுக்கு நடுவிலே, அகல் வைராக்கியத்தோடும் ரோசத்தோடும் எரிந்துகொண்டிருக்கிறது! வியப்பு ஆட்கொண்டது.

''என்ன சொல்லுது தீர்ப்பு?'' கைகளில் தாங்கிய கன்னத்தைச் சாய்த்தார் அவர்.

''புதுசா என்ன சொல்லப் போகுதுங்க, அப்பா?'' என்று கூறி நிறுத்தினான் வீரமணி. முதுகைச் சொறிந்து கொண்டான். ஏறிட்டான். ''எல்லாம் ஏற்கெனவே நம்பளுக்குத் தெரிஞ்ச ரகசியம்தானுங்க. நீங்களும் அம்மான் ராமையாத் தேவரும் அடியிலே ராசியாகப் பேசிப் புழங்கிட்டுச் சுமுகமாய் இருந்த காலத்திலே, நீங்க அம்மான்கிட்டே வாங்கின கடன் தொகை பதினெட்டாயிரம் ரூபாய்தான்! ஆனா, நீங்க எழுதிக் கொடுத்ததோ ரூபாய் இருபதாயிரத்துக்கு! அம்மானுக்கு நீங்க புரோநோட்டு வரைஞ்சு, கையொப்பம் போட்டுக் கொடுத்த அந்தத் தொகை-பிராமிசரி நோட்டுத் தொகை ரூபாய் இருபதாயிரத்தையும், சட்டப்படி அதுக்கு உண்டான ஆறே கால் சதவீத வட்டியையும் உடனடியாய் நீங்க வாதிக்குக் கட்டியாக வேணும்னு தீர்ப்பிலே எழுதியிருக்குதுங்க, அப்பா!'' என்று விவரித்தான் இளைஞன்.



ஆதிமூலம் நிதானம் காக்க எத்தனம் செய்தார்! வீண்! கண்கள் ரத்தம் கட்டிச் சிவந்தன. ''ராமையா அடுத்துக் கெடுத்தவன்!.. நயவஞ்சகன்!'' சொற்களில் சோளம் பொறிந்தது. நெடுமூச்சை நெட்டித் தள்ளியபின் பேச ஆரம்பம் பண்ணினார்.

''தம்பி, உலகத்திலே என்னென்னமோ இடுசாலமெல்லாம் தலைகீழாய் நடக்குது. உன் தாய்மாமனை நினைச்சுப் பார்த்தாக்க, உண்ணச் சோறு உடம்பிலேஒட்டவே ஒட்டலே! ஆனா, அந்தப் படுபாவிக்கு எல்லாம் ஒட்டுது! உப்புப்போட்டுச் சாப்பிடுறானா அவன்? ராமையா அண்ணைக்குக் கடுத்தத்திலே சொன்ன சொல்லை நம்பினேன் நான். நினைச்சுப் பார்த்தால், பயாஸ்கோப் பார்க்கிறதாட்டமே இருக்குது! நான் அவன்கிட்டே உதிரி உதிரியாய் வாங்கியிருந்த கடன் தொகை சாடாவையும் எங்க ரெண்டு பேர் பேரேட்டுப் பிரகாரம் ஒத்துப் பார்த்துக் கூட்டுப் புள்ளி போட்டோம். கடன் பதினெட்டாயிரத்துக்கு ஒடிடுச்சு. புரோநோட்டுப் பூரிச்சுக்கிட்டால் தேவலாம்னு பல்லைக் காட்டினான் அவன். தாயும் மகளும் என்றாலும், வாயும் வயிறும் வேறேதானே? நான் அட்டி சொல்லலே! அப்பத்தான் ஒரு புதுச்சூதை இடவிட்டான் அந்த அயோக்கியத் துரோகி!''

பெரியவர் சற்றே ஓய்ந்தார்; அலைக்கு ஓய்வு கிடையாது.

''வீரமணி, கேட்டுக்க கதையை இப்பவும். ''அயித்தான், விடிஞ்சதும் நாள் சுகமில்லை. ராவோடு ராவோ புரோநோட்டு எழுதித் தந்திடுங்க. நீங்க எனக்குத் தர வேண்டிய பதினெட்டாயிரத்துக்கு இப்ப நோட்டு எழுதப் போறீங்க. உங்களுக்கு என்னமோ அவசரமான முடை உறுத்துதின்னு சொன்னீங்களே? நானே அந்திக்குள்ளே ரூபாய் ரெண்டாயிரத்தை ரொக்கமாய் உங்க கையிலே கொண்டாந்து தந்துப்புட்றேன் கட்டாயம். ஆனபடியினாலே, தொகை ரவுண்டா வருறப்பிலே நீங்க இருபதாயிரத்துக்கே எழுதித் தந்திட்டால் சிலாக்கியம். ஒரு சல்லிக்கூட பிசகு பண்ண மாட்டேன். நம்புங்க! அப்படின்னு செப்பினான். சொந்த மச்சான் பேச்சை. அதிலேயும் பணத்திலே படுத்துப்புரளுற மச்சானி பேச்சை நம்பாமல் என்ன செய்ய? ஒப்புக்கிட்டு, அவன் சொல்லை நம்பி, இருபதாயிரத்துக்கே அவன் இஷ்டப் பிரகாரம் நோட்டு எழுதிக் கொடுத்திட்டேன். ஆனா, விடிஞ்சதும் கதை திசை மாறிப் பூடுச்சு. முதல் காளாஞ்சி தவகல் மூண்டிச்சு. ஆத்தாளுக்குப் பயப்படுற ஆத்மா இது. நியாயத்துக்குத் துணை நின்னேன். அவனே தன்னோட அநியாயத்துக்கு நான் துணை நிற்கலேன்னு கடுப்புகொண்டு சொன்ன சொல்லையும் காற்றிலே தூற்றிவிட்டுப் புட்டான். கடைசி மட்டுக்கும் அவன் அந்தப், பணம் ரெண்டாயிரத்தை என் கையிலே கொடுக்கவே கிடையாது!

இருமல் சிணுங்கிற்று.

பேச்சு முடிந்துவிடும்.

''தம்பி, தெய்வம் கண்ணுக்குத் தெரியாது. ஆனாலும் நாம பயப்படுறோம். ஆனால் உன் மாமன் ராமையாத் தேவனை கண்ணுக்குத் தெரிகிற பணத்துக்குத்தான் பயப்பட்டுப் பழக்கம். ஊர்க்கட்சித் தகராறிலே அந்தப் பயலோட மானத்தைக் காத்தவன் நான். அந்த நன்றியை மறந்திட்டான். போகுடிச் சென்மம்!... தெய்வம் வெறும் கல்தானேன்னு நம்பி, என்கிட்டே கொடுக்காத ரூபாய் ரெண்டாயிரத்தையும் சேர்த்து எழுதப்பட்டிருந்த என் புரோநோட்டின் பேரிலே எம் மேலே அவன் பிராது போட்டு தாவா தொடுத்தான். ராமையாகிட்டே கைநீட்டி வாங்கினது பதினெட்டாயிரமேதான்னு வக்கீல் அய்யர் மூலம் சொல்லி எதிர் தாவா போட்டேன் நான். என் பேச்சு செல்லலே! தெய்வத்துக்குத் தெரிஞ்ச உண்மைச் சங்கதி நீதிக்கு விளங்காமலே போயிடுச்சுதே? இம்...சட்டம் ஒரு இருட்டறை என்கிறது மெய்தான் போலே! ஊம்....காலம் கெட்ட இந்த கலியுகத்திலே சத்தியத்துக்கும் தருமத்துக்கும் பணியாம அடாவடி அடிச்சு அக்கிரமம் செய்கிற ராமையாத் தேவன் மாதிரியான நயவஞ்சகத் துரோகிப் பயல்களுக்குத்தான் காலம் போலே!

ஆத்திரமும் சோகமும் எரிமலையாக வெடிக்கப் பேச்சை முடித்தார் பெரியவர். விழி முனைகள் கசிந்தன.

வீரமணி நெடுமூச்செறிந்தான். ''நீதிக்குச் சட்டப்படியேதான் பேசத் தெரியும். ஆனால் அந்தச் சட்டம் எப்பவுமே தருமநியாயப்படியே பேசிடும்னு நாம எதிர்பார்க்கிறதுக்கில்லே!.. இந்த விதி விசித்திரமானதுதான்! இந்த விசித்திரத்துக்கு இப்ப நாமே உதாரணமாக நின்னுக்கிட்டு இருக்கோமுங்களே? ஊம்!.... நீங்க அம்மான்கிட்டே வாங்கின கடன் பணம் ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்தான்! பேச்சுப்படி, அனுமெத்திலே நின்ன ரூபாய் ரெண்டாயிரத்தை அந்த மனுசன் தரவே கிடையாது. ஆனா, ரெண்டாயிரத்தையும் மறுநாளே தந்திடுறேன்னு சொல்லி, நையம்பாடி உங்ககிட்டேயிருந்து இருபதாயிரம் ரூபாய்க்கு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிட்டார் அவர். கேடுகெட்டவர்! திட்டமிட்டே நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டார்! உண்மை கசக்கத்தான் செய்யுது. அம்மான் ராமையாத் தேவர் வேணும்னே மோசடி செஞ்சிட்டார். அந்த எமகாதக மனுசன் இரண்டாயிரத்தை உங்க கையிலே ஏற்கெனவே கொடுத்திட்டுத்தான் உங்ககிட்டேயிருந்து நோட்டெழுதி வாங்கினேன்னு கோர்ட்டிலே அடிச்சுப் பேசுறதுக்குச் சாட்சி சொல்ல உங்க பிராமிசரி நோட்டு அவர் கையிலே இருந்திச்சு! ஆனா, நீங்க அந்தத் தொடுசுப் பணம் ரெண்டாயிரத்தை அவர்கிட்டேயிருந்து வாங்கல்லே என்கிறதுக்கு சட்டபூர்வமான சாட்சி எதுவுமே உங்க வசம் இல்லாமல் போயிடுச்சுங்களே? இல்லீங்களா...அப்பா!''

''அது உண்மைதான் தம்பி!'

''அந்த உண்மைக்குப் பேர்தான் தருமம். அந்தத் தருமம்தான் கடவுள். 'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்' என்கிறது மூத்தவங்க வாக்கு. அதைச் சோதிச்சுக் காட்டவேண்டியது, காலத்தோட பொறுப்பு. ஆனா நம்பளைச் சோதிக்க நேரம் காலம் பார்த்துக்கிட்டுப் பிணந் தின்னும் கழுகாய்க் காத்துக்கிட்டு இருக்கார் ராமையா, அம்மான்! அதைச் சமாளிக்கக் கைக்கு மெய்யாய் இப்பவே ஒரு வழியைத் திட்டமிட்டு முடிவு செஞ்சாக வேணுமுங்க, அப்பா!''

''சுத்தமான பேச்சு, வீரமணி. உன் அம்மான் கடனை உளவடைக்க ஒருதோது பண்ணியிருக்கேன். அது கிடக்கட்டும், இப்போ அதைப்பத்திப் பேசிக் கலந்து நாம ஒரு நல்ல முடிவுக்கு வந்தாக வேணும். ரொம்ப ரொம்ப அவசரமான காரியம் இது; அவசியமுமான காரியமும்தான்!'' தேவரின் உதடுகளில் இதயம் துடித்திருக்க வேண்டும்.

''என்ன காரியமுங்க அது?''

''நல்ல காரியம்தான், தம்பி! மங்களகரமான சேதிதான், மகனே! நம்ப வீட்டு வாசற்படியை மிதிக்க ஓட்டமும் நடையுமாய் வந்துக்கிட்டிருக்குதே ஆவணி? இனிமேலும் அந்த நல்ல சங்கதியைப்பத்தி உன்கிட்டே சொல்லாமல் மெத்தனமாய் இருப்பேனா நான்? ''இந்தாலே சொல்லிப்பிடுறேன், வீரமணி!''

ஆதிமூலம் பேச்சை நிறுத்தினார்.

அவரா நிறுத்தினார்?

அவருள் வெடித்திட்ட புகைச்சல் இருமல் அல்லவா நிறுத்தித் தொலைத்தது!


வீரமணி வாய் பிளந்து நின்றான்; அவனுடைய நெஞ்சம் அவனிடமா தஞ்சம் அடைந்திருந்தது?

அந்தச் சத்தியம் அன்னக்கொடிக்குத்தான் தெரியுமோ?


பெரியவர் வாய் திறந்தார்.


அப்பா விடுகதை எதுவும் போடாமல் இருக்க வேண்டும்!

(வளரும்)




# கண்ணாடியில் உருவாகும் கலை வடிவங்கள்









வானளாவிய உயர்ந்த கட்டடங்கள்; வனப்புள்ள சிற்ப வேலைப்பாடுகள்; எண்ணத்தை ஈர்க்கும் எழில் ஓவியங்கள்; கண்ணைக் கவரும் கலை நுணுக்கங்கள் எல்லாம் இந்தச் சின்னஞ் சிறு விரல்களிலே அன்றோ பிறக்கின்றன!

மண்ணாலும், மரத்தாலும், உலோகத்தாலும் செய்யப்படும் பொருள்கள் தவிர இன்று பிளாஸ்டிக்காலும், கண்ணாடியாலும் செய்யப்படும் பொருள்கள் — பொம்மைகள் பெருமளவில் தயாராகின்றன.

கண்ணாடிக் குச்சிகளைக் (Rod) கொண்டு வெப்பத்தின் மூலமாக வகை வகையான பொம்மைகள் உருவாக்கப்படும் விதத்தைப் பார்க்கும்போது நம்மால் வியக்காமலிருக்க முடியவில்லை.

தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறையின் ஓர் அங்கமாகச் சென்னை நுங்கம்பாக்கத்தில் செயல்படுகிறது, 'அரசினர் கண்ணாடிப் பொருள்கள் பயிற்சி நிலையம்'. இம்மாதிரியான பயிற்சி நிலையம் தமிழகத்தில் இதுவே முதலாவதாகும் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

வாயு (Gas) மூலமாகக் கண்ணாடிக் குச்சிகளைத் தேவையான அளவுக்கு வளைத்து வளைத்துக் கப்பல், காளைமாடுகள், மான், மனிதன் என்று உருவங்களை உருவாக்குகிறார்கள். இதற்கான பயிற்சி இங்கே அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியில் சேருவதற்குக் குறைந்தது எட்டாவது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். 18 வயதுக்குமேல் 25 வயதுக்குள்ளான ஆண், பெண் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

பயிற்சி பெறும் காலம் 2 ஆண்டுகளாகும். முதலாண்டில் 10 பேருக்கும், இரண்டாம் ஆண்டில் 10 பேருக்கும் பயிற்சி தரப்படுகிறது. முதலாண்டில் பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 30 உதவித் தொகையும், இரண்டாம் ஆண்டில் பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 40 உதவித் தொகையும் வழங்கப்படுகிறது இந்நிலையத்தில், பயிற்சி தருவோர் இருவர் பணியாற்றுகின்றனர். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இங்குப் பயிற்சி பெற்றவர்கள் பிற தொழிற் கூடங்களில் சேர்ந்தோ அலலது தனிப்படட முறையிலோ பயன்பெறலாம்; பொருளீட்டலாம்.

இந்தத் தொழிலைத் தனிப்பட்ட முறையில் நடத்துவதற்குத் தொழில் வணிகத் துறை கடன் தந்து உதவி செய்வதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே பொம்மையைச் செய்ய முடியுமா? அதற்கு அடிப்படைப் பயிற்சி வேண்டாமா? அதற்காக இங்கு முதலில் சித்திரம் எழுதுவதற்குப் பயிற்சி தரப்படுகிறது. இதற்கு அடுத்த நிலைதான் பொம்மைகள் உருவாக்குவது. ஏற்கெனவே சித்திரத்தில் கொஞ்சம் பயிற்சி உள்ளவர்களுக்கு இந்தப் பொம்மைப் பயிற்சி சற்று எளிதாக இருக்கும்.

1961-ல் துவக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையத்தின் பல்வேறு கண்ணாடிப் பொம்மைகள் பூம்புகார் மற்றும் தொழில் வணிகத்துறையின் விற்பனைக் கூடங்களில் விற்கப்படுகின்றன. நாகரிகம் வேகமாக வளர்ந்து வரும் இந்நாளில் இதுபோன்ற நவீனப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

பல்வேறு கண்காட்சிகளில் இந்நிலையத்தினர் பங்குகொண்டு பாராட்டுதல்கள் பெற்றுள்ளனர். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற நாமக்கல் கவிஞரின் வாக்கிற்கிணங்க, ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில் தேவைப்படுகிறது. அதுவே கவலையற்ற வாழ்க்கைக்கு வழியும் வகுக்கிறது.

இன்றைய மாணவ மணிகள் இதனை நன்குணர்ந்து, 'எத்தொழில் எதுவும் தெரியாமல் இருப்பதை விடுத்து, கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்வதற்கு ஆர்வமுடன் முன்வர வேண்டும். அதுவே முன்னேறுவதற்கான சிறந்த வழி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—பி.வி.ஜி.

# ஏன்


இப்படி

# வீண் செய்கிறீர்கள்

# உணவை

பலருக்கு
அது மிகவும்
தேவைப்
படுகிறதே

வீட்டிலும், விருந்துகளிலும், ஹோட்டல்களிலும், கிளப்புகளிலும் உங்களுக்குத் தேவையானதையே போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள். இதனால் உங்களுடைய பணமும் மிச்சமாகும்; நாட்டின் வசதியும் வீணாகாது.



உணவு
அத்தியாவசிய
மானது

# வீண் செய்யாதீர்கள்

davp 73/329

# கேளுங்கள் கொடுக்கப்படும்

வினா: 1-2-74 இதழில் 19-ஆம் பக்கத்தில் கரும்பைப் பற்றி வெளிவந்துள்ள செய்தியில், தென்னுர்க்காடு மாவட்டத்திற்கு தழைச்சத்து 112 கிலோ தேவை என்று கூறியுள்ளீர்கள். 20-ஆம் பக்கத்தில் 23 கிலோ தழைச்சத்துப் பெறுவதற்கு 50 கிலோ யூரியா தேவை என்று குறிப்பிட்டு உள்ளீர்கள். அப்படியானுல் 112 கிலோ தழைச்சத்து பெறுவதற்குச் சுமார் 250 கிலோ யூரியா அதாவது 5 மூட்டை தேவைப்படுகிறது. அவ்வளவு யூரியா தற்பொழுது வைக்க முடியுமா? அதற்கு என்ன செய்யலாம்? இதற்கு வேறு வழியே இல்லையா? மேலும் 90-ஆம் நாளும், 110-ஆம் நாளும் தோகையின் மேல் யூரியா கரைசலை அடிக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். 90-ஆம் நாள் கரும்பு சுமார் 9 அடி உயரம் வளர்ந்து இருக்கும். அப்போது எப்படி அடிக்க முடியும்? பண்ணையில் எல்லாம எப்படி அடிக்கிருர்கள் என்பதை விளக்கமாகப் பதில் அளிக்காவிட்டாலும் தனியாக ஒரு கடிதத்திலாவது பல விவசாயிகளின் நன்மை கருதி அவசியம் பதில் அளிக்கவும். இதற்கு முன் 3 முறை கேள்வி கேட்டு எழுதியிருந்தேன். பதில் இல்லை புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து ஏமாந்து போய்விட்டேன். இம்முறையாவது பதில் கிடைக்கும் என மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இளம் விவசாயி.

—இரா. குணசேகரன்,
மேலப்பாலையூர்,
சி. கீரனுர் அஞ்சல்,
விருத்தாச்சலம் வட்டம்,
தென்னுர்க்காடு மாவட்டம்.

விடை: ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதிக்குத் தற்பொழுது ஏராளமான கடிதங்கள் வருகின்றன. அவை எல்லாவற்றிற்கும் பதில் எழுதி வெளியிட 'தமிழரசு' இதழில் போதிய பக்கம் இல்லை. உச்ச அளவாக 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதிக்கு 4 பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன. சில நேர நேரங்களில் சில முக்கியச் செய்திகளை வெளியிட வேண்டி இப்பகுதியை நிறுத்தி வைத்து அடுத்த இதழில் வெளியிட நேரிட்டு விடுகிறது. தவிர்க்க முடியாத காரணத்தினுல்தான் இவ்வாறு நேரிடுகிறது. தாங்கள் முன்பே 3 கடிதம் எழுதியதாகக் குறிப்பிட்டு உள்ளீர்கள். அக்கடிதங்கள் இவ்வலுவகத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. கேள்வி கேட்பவர்கள் கடிதத்தை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் நல்லது.

ஆசிரியர் (கேளுங்கள்
கொடுக்கப்படும்),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின்படி, தென்னுர்க்காடு மாவட்டத்தில் கரும்பு பயிரிடுவதற்கு ஏக்கருக்கு 112 கிலோ தழைச் சத்தும், 45 கிலோ சாம்பல் சத்தையும் கரும்பு நட்ட 45-வது நாள், 90-வது நாள் ஆக இருதடவைகளில் மேலுரமாக இடவேண்டும் என்று 1-2-74 தேதிய 'தமிழரசு' இதழில் பக்கம் 19-ல் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. ஏக்கருக்கு 23 கிலோ மணிச்சத்தை அடியுரமாக இடவேண்டுமென்று 16-1-74 தேதிய 'தமிழரசு' இதழில் பக்கம் 63-ல் பரிந்துரைத்துள்ளதையும் இத்தருணத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

தழைச்சத்தை யூரியா மூலமாக அளிப்பதாக இருந்தால் 45-வயது நாளில் 124 கிலோ யூரியாவையும், 90-வது நாளில் 124 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடுமாறு அதே பக்கத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதைத் தாங்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். தாங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் 5 மூட்டை யூரியா உரம் அளித்தால்தான் கரும்பு நல்ல மகசூல் தரும். ஆனுல் அதை 2 பாகமாகப் பிரித்து ஒவ்வொரு முறையும் 2.5 மூட்டை வீதம் இடவேண்டும். தற்பொழுது யூரியா, அமோனியம் சல்பேட் முதலியன கிடைப்பது அரிதாக உள்ளது உண்மை எனினும், பரிந்துரைக்கும் அளிவிலும், காலத்திலும் கரும்புக்கு உரமிடுவதே பயனுடையதாக இருக்கும்!

யூரியாவோ அல்லது அமோனியம் சல்பேட்டோ தங்களுக்குக் கிடைப்பது அரிதாக இருப்பின் 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தைப் பயன்படுத்தி உரமிடலாம்! 'காம்ப்ளெக்ஸ்' உரமிடுவதென்ருல், அடியுரமாக மணிச்சத்து இடுவதற்குத் தனியே சூப்பர் பாஸ்பேட் போட வேண்டியதில்லை. கரும்பு நடவு செய்த 45-வது நாளில் 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தில் 132 கிலோவையும், 74 கிலோ யூரியாவையும் மேலுரமாக இட்டு, 90-வது நாளில் மீண்டும் 132 கிலோ 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரத்தையும், 74 கிலோ யூரியாவையும் இடவேண்டும். இந்த அளவில் உரமிடும்போது, மணிச்சத்து ஏக்கருக்கு 45 கிலோ அளிவிற்குக் கிடைக்கிறது. மணிச்சத்து 23 கிலோவே போதுமெனினும், 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரமிடும்போது இதைத் தவிர்க்க வழியில்லை. மேலும், சர்க்கரை ஆலைப்பகுதிகளில் 45 கிலோ மணிச்சத்தும், 45 கிலோ சாம்பல் சத்தும் இடுமாறு பரிந்துரைக்கப்படுவதால், மேற்கூறிய அளவில் உரமிடுவதே சிறந்தது.

17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரமும் கிடைக்கவில்லை எனில் 16:4:4 என்ற கலப்பு உரத்தில் 45-வது நாளில் 350 கிலோவும், 90-வது நாளில் 350 கிலோவும் மேலுரமாக இடப்பட வேண்டும். இவ்வாறு இடுவதால் ஏக்கருக்கு 112:28:28 என்ற அளவில் சத்து கிடைக்கும். இது தென்னுர்க்காடு மாவட்டத்திற்கான பொதுவான உர அளவாகும். யூரியா உரமில்லாமல் உரமிட இது சிறந்த வழியாகும்!

90-வது நாளில் கரும்பு சுமார் 9 அடி உயரம் வளர்ந்து இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இது தவறு. பொதுவாக 3 மாதத்தில் கரும்பு 3 அல்லது 4 அடி உயரத்தில் தான் இருக்கும். அதில் யூரியா கரைசலைத் தெளிப்பது கடினமான செயலல்ல!

**வினா:** நான் பணியாற்றிவரும் கிராமத்தில் ஒருவிவசாயியினுடைய மாமரம் ஒன்று வருடா வருடம் நிறைய பூ பூக்கின்றது. ஆனால் காய்ப்பதற்கு முன் பூக்கள் அனைத்தும் கருகி உதிர்ந்து விடுகின்றன. இக் கிராமத்தில் வேறு எந்த மரத்திலும் இம்மாதிரியாகப் பூப்பதில்லை. எதன் காரணமாக பூக்கள் கருகி உதிர்ந்து விடுகின்றன? அதைத் தடுத்து மரத்தைக் காய்ப்புக்குக் கொண்டு வர வழி என்ன? மேலும் ஒரு விவசாயியின் தென்னை நாற்று நட்டு மூன்று மாதங்கள்தான் ஆகின்றது. இலைகள் வாடி அதில் புள்ளி போன்று காணப்படுகிறது, குருத்தும் முளைப்பதில்லை. இது எதனால்?

—ரெ. சீனிவாசராமானுஜம்,
இளைஞர் அணி தொண்டர்,
மேல்பட்டை விண்ணமங்கலம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:** தாங்கள் குறிப்பிடும் மாமரத்தின் வயது என்ன என்பதைக் குறிப்பிடவில்லை. வயது தெரிந்தால் நல்லது. மாமரத்தின் பூக்கள் கீழ்க்கண்ட காரணங்களால் உதிரக்கூடும்.

*(1)* மாமரத்துத் தத்துப்பூச்சி (Mango hopper) எனப்படும் பூச்சிகள் மாம்பூக்களில் உள்ள சாற்றை உறிஞ்சி விடுவதால், பூக்கள் வாடி உதிரக்கூடும்!

*(2)* சாம்பல் நோய் (Powdery mildew) தாக்குவதாலும் பூக்கள் வாடி, காய்ந்து, உதிர்ந்து விடக்கூடும்!


*(3)* பூ பூத்த பிறகு, மாமரத்தைச் சுற்றி தண்ணீர் தேங்கி நின்றாலோ அல்லது ஈரம் காயாமல் மண் ஈரக்கசிவாகவோ இருந்தாலும் பூக்கள் உதிர்ந்து விடக்கூடும்!

*(4)* போதிய சத்து கிடைக்காததாலும் பூக்கள் உதிரக்கூடும்!

எனவே, அந்த மாமரத்தின் பூக்கள் எதனால் உதிர்கின்றன என்பதை நேரில் பார்த்தால் அன்றி சரியாகக் கூறமுடியாது! உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அழைத்து வந்து, அவரிடம் அந்த மாமரத்தைக் காட்டி பூ உதிர்ந்து விடுவதின் காரணத்தை அறிந்து, அவர் பரிந்துரைக்கும் முறையிலும், அளவிலும் மருந்து தெளிப்பது நல்லது.

இளைஞர் அணி தொண்டரான தாங்களும் இதுபற்றித் தெரிந்து கொள்ளுதல் பயனுடையதாக இருக்கும் என்பதற்காக, கீழ்க்கண்ட விளக்கத்தையும் தெரிவிக்கின்றோம்.

மாமரத்துத் தத்துப்பூச்சி என்பது பழுப்பு நிறமாகவும், கருப்பும் சிவப்பும் கலந்த புள்ளிகளுடனும் காணப்படும். இப்பூச்சிகள் பூக்களில் தங்கி சாற்றை உறிஞ்சி விடுவதால், பூக்கள் உதிர்ந்துவிடும்! இப்பூச்சிகளை ஒழிக்க, பூச்சிகள் தோன்றிய உடன் டி.டி.டீ 50 சத மருந்தைத் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். சராசரியாக ஒரு பெரிய மரத்திற்கு 45 கிராம் மருந்தை 22.5 லிட்டர் (5 காலன்) தண்ணீரில் கலந்து (அதாவது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து வீதம்), 'கை-டிரீ' (Hi-tree) தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.



சாம்பல் நோய் தாக்கிய பூக்களில் மென்மையான வெண்மைப்பொடி தூவியதைப் போன்று காணப்படும். இந்நோயினால் பூக்கள் மட்டுமல்ல, கொழுந்துகள், பிஞ்சுகள், காய்களும் வாடி காய்ந்து உதிர்ந்துவிடும்! பனிக்காலங்களில் இந்நோய் கடுமையாகக் காணப்படும். இந்நோயைத் தடுக்கக் கொழுந்துவிடும் சமயம் ஒரு முறையும், பூக்கள் தோன்றும் சமயம் ஒருமுறையும் ஆக 2 முறை, ஒரு மரத்திற்கு 1 முதல் 1.5 கிலோ கந்தகத்தூளைத் தூவ வேண்டும் அல்லது 56 கிராம் நனையும் கந்தகத்தூளை 22.5 லிட்டர் தண்ணீரில் கலந்து 'கை-டிரீ' தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மாமரம் பூத்த பிறகு, மாமரத்தைச் சுற்றித் தண்ணீர் நின்றாலும் அல்லது மண் ஈரக்கசிவாகவோ இருந்தாலும் பூக்கள் உதிர்ந்துவிடும். இதைத் தவிர்க்க மாமரத்தைச் சுற்றி தண்ணீர் தேங்கி நிற்காமல் பாதுகாக்க வேண்டும். மண்ணையும் காயவிட வேண்டும். இவ்வாறு பூக்கள் உதிர்வதைத் தடுக்க, மாமரத்தைச் சுற்றிலும் உள்ள மேல் மண்ணை அகற்றி, வேர்கள் ஓரளவிற்கு வெளியில் தெரியுமாறு சில நாட்கள் காய வைக்கும் பழக்கம் சில தனியார் மாந்தோப்புகளில் உள்ளது. வேறு சில இடங்களில் மேற்கூறியவாறு மண்ணை அகற்றிவிட்டு இலைசாகச் சருகுகளைப் போட்டு நெருப்பிட்டுக் கொளுத்தும் முறையும் பிற மாநிலங்களில் வழக்கத்தில் உள்ளது. ஆனால் இவ்வாறு செய்ய நல்ல அனுபவம் தேவை. அனுபவம் இன்றி செய்தால், மாமரத்திற்கு தீங்கு ஏற்பட்டு விடும்!

மண்ணில் இருந்து போதிய சத்து கிடைக்காததால் பூக்கள் உதிர்வதைத் தடுக்க இரசாயன உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும். தாங்கள் குறிப்பிடும் மரத்தின் வயதைத் தெரிவிக்காததால், சரியான உர அளவைக் கூற இயலவில்லை. எனவே, நன்கு வளர்ந்த பெரிய மரம் என்று கருதி அம்மரத்திற்கு ஆண்டுதோறும் 50 கிலோ மக்கிய தொழு எரு, 5 கிலோ அமோனியம் சல்பேட், 5 கிலோ எலும்புத் தூள், 2·5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 3 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம். இவ்வுரங்களை ஜூலை மாதத்தில் வைப்பது சிறந்தது.

எனவே மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு மாமரத்தின் பூக்கள் உதிர்வதைத் தடுத்துப் பயன்பெறலாம்.

தாங்கள் குறிப்பிடும் தென்னை குருத்து அழுகல் நோயால் தாக்கப்பட்டிருக்கும்! இதைத் தடுக்க புள்ளிகள் உள்ள மட்டைகளை வெட்டி எரித்துவிட்டு ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 கிராம் தாமிர பூசணக்கொல்லி மருந்தைக் கலந்து தெளிப்பது சிறந்த வழியாகும்.

**வினா:** எங்கள் வீட்டில் இருக்

கும் ஒட்டு சப்போட்டா மரம் நான்கு ஆண்டுகளாகியும் கனி அளிக்கவில்லை. சில நேரத்தில் பூ பூத்து உதிர்ந்துவிடுகின்றது. மிதமான வெப்பம் மேல் விழுகின்றது. மரம் போதிய உயரத்தில் இருக்கின்றது. மரம் கனி அளிக்க என்ன இடவேண்டும்?

—சு. பன்னீர் செல்வம்,
96, மெயின் ரோடு,
நாகூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:** பொதுவாக சப்போட்டா ஒட்டுச் செடிகள் 5 ஆண்டில்தான் பலன் கொடுக்கத் துவங்கும். தங்கள் சப்போட்டா மரத்திற்கு மிதமான வெப்பம் கிடைப்பதுடன், போதிய உயரமும் வளர்ந்துள்ளதால், உரமிடாதது ஒரு பெருங் குறையாக உள்ளது. தங்கள் சப்போட்டா மரத்திற்கு தற்பொழுது 5-வது வயது நடப்பதால், பின்கண்டவாறு உரமிடுதல் வேண்டும்.

மக்கிய தொழு எரு—40 கிலோ

ஆமணக்குப் பிண்ணாக்கு—6 கிலோ

எலும்புத்தூள்—2.5 கிலோ

மேற்கூறிய உரங்களை இரண்டாகப் பிரித்து வருகிற ஜூன் மாதத்தில் ஒரு பாதியையும், நவம்பர் மாதத்தில் மறுபாதியையும் வைத்து, தண்ணீர்விட வேண்டும். இவ்வாறு உரமிட்டால் அடுத்த ஆண்டில் உங்கள் சப்போட்டா மரம், காய்க்கத் தொடங்கும்!

**வினா:** நர்ன் ஒரு ஏக்கரில் 'ரொபஸ்டா' வாழை பயிரிடப் போகிறேன். அதற்கான சாகுபடி குறிப்புகள், உரம், முதலியவற்றை விரிவாகத் தெரிவிக்கவும்.

—கே. நடராசன்,
மூப்பன்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை:** 'ரொபஸ்டா' வாழை நடுவதற்கு ஏற்ற சிறந்த பருபருவம் கார்த்திகை முதல் மாசி மாதம் வரையான காலமாகும். வியாபார நோக்குடன் 'ரொபஸ்டா' வாழையை மழை பெய்யும் மாதங்கள் தவிர்த்த மற்ற எல்லா மாதங்களிலும் பயிரிடலாம்!

நல்ல வடிகால் வசதியுடைய செழிப்பான நிலம்'ரொபஸ்டா' வாழைக்கு மிகவும் ஏற்றது. நிலத்தை நன்கு உழ வேண்டும் அல்லது மண்வெட்டியால் கொத்தி விடவேண்டும். பிறகு 6 அடி × 6 அடி இடைவெளியில் 45 சென்டி மீட்டர் (1.5 அடி) கன அளவில் குழிகள் தோண்டி, சுமார் 20 நாட்கள் வரை அக்குழிகளை ஆறப்போட வேண்டும். அதன் பின்னர் குழிகளில் செம்மண், மணல், மாட்டு எரு, குழியின் மேல் மட்ட மண் ஆகியவைகளைக் கலந்து நிரப்ப வேண்டும். மூக்கு வண்டு தாக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு குழியிலும் 50 கிராம் 'பி.எச்.சி.' 10 சதத் தூளைப் போட வேண்டும்.

ஒரு ஏக்கர் 'ரொபஸ்டா' பயிரிட 1,210 வாழைக்கன்றுகள் தேவைப்படும். மூன்று அல்லது நான்கு மாதத்திய கத்திக் குருத்துக் கன்றுகளே நடுவதற்குச் சிறந்தது! வாழைக் கன்றுகளை 0.1 சதவிகித 'செரசான்' கரைசலில் (ஒரு லிட்டர் தண்ணீரில் 1 கிராம் கரையும் செரசான் வீதம் கலந்து) ஐந்து நிமிடங்க்ள்வரை வைத்திருந்து, பிறகு எடுத்து நடுவதே, வாடல் நோயைத் தடுப்பதற்குரிய வழியாகும்! கன்றுகளைக் குழிகளின் நடுவில் நட்டு பிறகு கன்றைச் சுற்றி மண்ணை நன்ருக அழுத்தி அணைக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சினுல் போதுமானது.

'ரொபஸ்டா'—வாழைக்கு கன்று நட்ட 3-வது மாதத்தில் ஒருமுறையும், 5-வது மாதத்தில் ஒருமுறையும் ஆக 2 முறை உரமிடுதல் வேண்டும். மூன்ருவது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் பின்கண்டவாறு உரமிட வேண்டும்.

தொழு எரு—12 கிலோ
அமோனியம் சல்பேட்—300 கிராம்
சூப்பர்பாஸ்பேட்—250 கிராம்
மியூரியேட் ஆப் பொட்டாஷ்—330 கிராம்.
கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

மேற்கூறியவாறு உரமிட, தனி உரங்கள் கிடைக்கவில்லை எனில், 8-ஆம் எண் கலப்பு உரத்தில் (6:6:18) ஒவ்வொரு வாழைக்கும் 496 கிராம் வீதம் வைக்கலாம். இவ்வாறு உரமிட ஏக்கருக்கு 600 கிலோ கலப்பு உரம் தேவைப்படும்.

ஐந்தாவது மாதத்தில் ஒவ்வொரு வாழைக்கும் பின்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

தொழு எரு—12 கிலோ
அமோனியம் சல்பட்—150 கிராம்
மியூரியேட் ஆப் பொட்டாஷ்—330 கிராம்.
கடலைப் பிண்ணாக்கு—140 கிராம்.

இவ்வாறு உரமிட தனி உரங்கள் கிடைக்கவில்லை எனில், 9-ஆம் எண் கலப்பு உரத்தில் (10 : 0 : 30) ஒவ்வொரு கன்றுக்கும் 620 கிராம் வீதம் வைக்க வேண்டும். இந்த அளவில் உரமிட ஏக்கருக்கு 750 கிலோ கலப்பு உரம் தேவைப்படும்.

'ரொபஸ்டா' வாழை பயிரிட்ட நிலத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கொத்தி விட்டுக் களை எடுத்தல் வேண்டும். பூச்சிகள், நோய்கள் தாக்குமாஞல் உங்கள் ஊர் ஆட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் கூறும் முறையில் மருந்து தெளியுங்கள்.

'ரொபஸ்டா' வாழை 12 அல்லது 13 மாதத்தில் அறுவடைக்கு வரும். ஒரு ஏக்கர் பயிரிட எல்லாச் செலவுகளும் உட்பட ஏறத்தாழ ரூபாய் 2,500 செலவாகும். ஒரு ஏக்கரில் இருந்து ரூபாய் 9,000 முதல் 10,000 வரை மொத்த வருவாய் கிடைக்கும். எனவே, செலவு போக ஒரு ஏக்கர் 'ரொபஸ்டா' வாழையிலிருந்து ரூபாய் 6,500 முதல் 7,500 வரை நிகர இலாபம் பெறலாம்!


**வினு:** நான் அரசினர் பள்ளியில் விவசாய ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். நான் ''தமிழரசு'' புத்தக வாசகன். இதில் விவசாய முறை சம்பந்தமான செய்திகள் வெளிவருவதால், இப் புத்தகம் எனக்குப் பெரிதும் பயன்படுகிறது. இதன் ஆண்டுச் சந்தா விவரத்தைத் தெரிவிக்கவும். நான் தபால் மூலம் பெற விரும்புகின்றேன். எனவே அதன் விவரங்களைத் தெரிவிக்கவும்.


—எஸ். தனராசு,
உழவியல் ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
விளாம்பட்டி அஞ்சல்,
மதுரை மாவட்டம்.

**விடை:** ''தமிழரசு'' தமிழ்ப் பதிப்பின் ஆண்டு சந்தா ரூபாய் 10.00. இத்தொகையைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால், தபால் மூலம் தங்களுக்குத் 'தமிழரசு' வந்து சேரும்.

# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்


குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.


















தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை-600001

நிருவாக மேலாளர்,

''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை—600002.

**வினா:** தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிடுகின்ற ''செய்திக் கதிர்'' என்னும் திங்களிதழுக்கு மாதச் சந்தா எவ்வளவு? யாருக்கு அனுப்ப வேண்டும்?

—நா. நடராசன்,
106, தெற்கு வாசல்,
திருவரங்கம்,
திருச்சி—6.

**விடை:** தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ''News Letter'' என்ற ஆங்கில மாத இதழை வெளியிட்டு வருகின்றது. தமிழில் வெளியிடவில்லை! இவ்விதழ் அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே இலவசமாகஅனுப்பப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு எனச் சந்தா செலுத்த வேண்டியதில்லை. தனிப்பட்டவர்களுக்கு அனுப்புவார்களா என்பதும் தெரியவில்லை. எனவே, இது பற்றிய விவரம் அறிய பின்கண்ட முகவரிக்கு நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள்:

'தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—641003''.

**வினா:** இளம் கடலைப் பயிர் மிகுந்த குளிரினால் பாதிக்கப்படுமா? கடலைப் பயிருக்கு மிகச் சிறந்த பட்டம் எது? மார்க்கழிப் பட்டமா? தைப் பட்டமா?

—கி. வே. ராமதாசு,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
சாம்பவர் வடகரை,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை:** இளம் கடலைப் பயிரின் வளர்ச்சி, மிகுந்த குளிரினால் தடைபடும். குளிர் காலம் மாறிய பின் பிறகு சரியாகப் போய்விடும். இறைவை கடலையை டிசம்பர் முதல் மார்ச்சு மாதம் வரை விதைக்கலாம். ஆனால் தண்ணீர் வசதி இருக்குமானால் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அதாவது மாசிப் பட்டத்தில் விதைப்பதே மிகவும் சிறந்ததாகும்.

**வினா:** பெட்ரோல் இல்லாமல் இயங்கக்கூடிய மோட்டார் கார் ஓடுவதற்கு வேறு ஒரு புதிய பொருள் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று வெளியிட்டு இருந்ததைப் படித்தேன். அதற்குப் புதிய முறைப்படி இயங்க வைக்க எனக்குச் சில உபகரணங்கள் தேவைப்படுகிறது. நான் உங்கள் முன்னிலையிலேயே செய்து இயங்க வைத்து காண்பிக்கிறேன். உடனடியாக எனக்கு விவரத்தைத் தெரியப் படுத்தவும்.

—ஆர். மறுமலர்ச்சி,
ஏனாதி அஞ்சல்,
பட்டுக்கோட்டை வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:** ''பெட்ரோல்'' அல்லது ''டீசல்'' போன்ற எரிபொருள்கள் (Fuel) பற்றாக்குறை நம் நாட்டில் மட்டும் அல்ல, உலகெங்கிலும் மிகவும் கடுமையாக உள்ளது. வளர்ந்து வரும் நாடான நம் இந்தியா இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் நாட்டுடைமையாக்கப் பட்ட பேருந்துகளை இயக்க 6 போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இக் கழகங்களில் ஒன்றான சேரன்போக்குவரத்து கழகத்தின் விழா ஒன்றில், போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு எம். எஸ். ராம், ஐ. ஏ. எஸ் அவர்கள் 'பெட்ரோல்', 'டீசல்' ஆகிய எரிபொருள்களுக்கான மாற்றுப் பொருள் கண்டுபிடிப்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்றும், அது பற்றிய விரிவான திட்டம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறிவித்துள்ளதையே நாளேடுகள் வெளியிட்டிருந்தன. இது பற்றி 16-2-74-ஆம் தேதிய ''தமிழரசு'' இதழில் பக்கம் 26-லும் குறிப்பிடப் பெற்றுள்ளது. தாங்கள் அத்தகைய மாற்றுப் பொருளைக் கண்டுபிடிக்க முடியுமெனின், அதன் விவரங்களைக் குறிப்பிட்டு, அதற்கான உபகரணங்களையும் தெரிவித்து பின்கண்ட முகவரிக்கு விவரமாகக் கடிதம் எழுதலாம்.

திரு எம். எஸ். ராம், ஐ. ஏ. எஸ்.,
போக்குவரத்துத் துறைச்
செயலாளர்,
தமிழ் நாடு அரசு,
செயிண்ட் ஜார்ஜ்கோட்டை,
சென்னை—600009.

தாங்கள் கூறுவது நடைமுறைக்கு ஏற்றதாக இருப்பின் தங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத்தர அவர் ஆவன செய்யக்கூடும். எனவே, முயற்சி செய்யுங்கள்!

**வினா:** தமிழ் நாடு அரசு இரண்டாவது சம்பளக் கமிஷன் உத்திரப்படி 1-9-1972 முதல் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு 'வெயிட்டேஜ்' கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. ஊழிய காலத்தைக் கணக்கிடும் பொழுது 2-10-70-க்கு முன்பிலிருந்து தொடர்ந்து நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே ஊராட்சி ஒன்றியத்தில் 'வெயிட்டேஜ்' கொடுத்துள்ளார்கள். நான் தமிழக அரசின் உத்தரவுப்படி ஊழிய கால அடிப்படையில் பதவி



உயர்வு பெற்று 1-6-71 முதல் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். 2-10-70-ல் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பணியாற்றவில்லை என்பதால், எங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் வெயிட்டேஜ் கொடுக்கமறுத்து விட்டார்கள். என் போன்றவர்களுக்கு வெயிட்டேஜ் கொடுப்பதற்கு அரசு ஆணையின்படி தகுதி உண்டா? இல்லையா என்பதை விளக்கமாக பதில் கூறவும். ''இந்த பதிலைத் தமிழகமே காத்திருக்கிறது!''

—பி. கே. கணபதி,
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கன்னியாகுரிச்சி அஞ்சல்,
மதுக்கூர் வட்டாரம்.

**விடை:** இது போன்ற கேள்விகள் நூற்றுக் கணக்கில் ''தமிழரசு'' அலுவலகத்திற்கு வந்துள்ளன. எனவே, இதற்குக் கூடுமான வரை தெளிவு ஏற்படுத்த, கீழ்க் கண்ட விளக்கத்தை அளித்துள்ளோம். தமிழ் நாடு இரண்டாவது சம்பளக் கமி

## தமிழ்நாட்டில் ஊராட்சி

தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாகம், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்களையும், ஊராட்சி ஒன்றிய நிலையில் ஊராட்சி ஒன்றியக் குழுவையும், கிராம நிலையில் ஊராட்சிகளையும் கொண்டுள்ள மூன்று நிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாவட்ட வளர்ச்சித் தனிக் குழுக்கள் கீழ்க்காணும் மாவட்டங்களில் செயல் படுகின்றன.

(1) தருமபுரி, (2) கன்னியாகுமரி, (3) நீலகிரி.

பின்வரும் 10 மாவட்டங்களில், இரண்டு மாவட்ட மேம்பாட்டுக் குழுக்களும் உள்ளன: (1) வட ஆர்க்காடு, (2) தென் ஆர்க்காடு, (3) கோயம்புத்தூர், (4) செங்கற்பட்டு, (5) மதுரை, (6) இராமநாதபுரம், (7) சேலம், (8) திருச்சி, (9) தஞ்சாவூர், (10) திருநெல்வேலி.


தமிழகத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவற்றில் 57 பேரூராட்சிகளும், 12,289 ஊராட்சிகளும் அடங்கியுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்சப்பட்டுள்ள முக்கியப் பணிகளில் தொடக்கக் கல்வி குறித்த பணியும் ஒன்றுகும். தமிழ்நாட்டில் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட 27,000-க்கும் அதிகமான பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள மானியம் பெறும் பள்ளிகள் ஏறக்குறைய 1,16,500 பேருக்கும் அதிகமான ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. இப் பள்ளிகளில் 40,40,700 மாணவர்கள் படிக்கின்றனர்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்த ஆண்டில் நான்காவது அகில இந்திய கிராமிய விளையாட்டுப் போட்டிகள் சேலத்தில் 13.2.74 முதல் 16.2.74 வரை சிறப்புடன் நடைபெற்றன.


இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாக 1,200 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

பல விளையாட்டுகளிலும் போட்டிகளிலும் தமிழ்நாடு அணிகள் பல பரிசுகள் பெற்றன. கால்பந்துப் போட்டியிலும், சடுகுடு போட்டியிலும் தமிழ்நாடு முதற்பரிசு பெற்றது.




பழ வளம் குறைந்துபோவதைத் தணித்து, **மா, மிளகாய்ப்** பயிர்களின் மகசூல் பெருகிட, உபயோகிப்பீர்

# ப்ளேஞே:.பிக்ஸ்



**மா**

மாமரப் பயிர்கள் மீது ப்ளேஞே:.பிக்ஸ் தெளிப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைத்துள்ளன. முன் பழுப்புப் பருவத்திலே, 4.5 லிட்டர் நீரிலே 1 மிலி வீதம் ப்ளேஞே:.பிக்ஸ் தெளிக்கும் போது, நீர் மட்டுமே தெளிக்கப்படும் கட்டுப்பாட்டுப் பயிர்களை விட 34 சத விகிதம் அதிகப் பழங்கள் கண்டுமுதல் தேறுவதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

**மிளகாய்**

4.5 லிட்டர் நீரிலே 1 மிலி ப்ளேஞே:.பிக்ஸ் வீதம், பழுக்கும் பருவத்திலே முதல் தெளிப்பும், 3-4 வாரங்கள் கழித்து இரண்டாம் தெளிப்புமாக, இரு முறை ப்ளேஞே:.பிக்ஸ் தெளித்து வந்ததன் பயனாக மகசூல் பெருகியதாகத் தெரிய வந்துள்ளது.



கோரிக்கையின் பேரில் விவரங்கள் தரப்படும்.

'ப்ளேஞே:.பிக்ஸ்' என்பது மே & பேக்கர் லிட். கம்பெனியின் டிரேடு மார்க்

M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய் • கல்கத்தா • கவுஹாத்தி • இந்தோர் • லக்னோ • மதராஸ் • நியூ டெல்லி • பாட்னா

உஷார், போலிகளை ஏற்காதீர்—உங்கள் பயிர் ஒப்பிலாச் செல்வம்

ஷன் பரிந்துரையின்படி புதிய சம்பள விகிதங்களை 2-10-70 முதல் செயல்படுத்த தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்தது. (ஆணை எண் : 222, நிதித் துறை, நாள் 8-2-71). இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளில் இருந்த குறைபாட்டை நீக்கவே தனி நபர் குழு (One man Committee) அமைக்கப்பட்டது. ஆணை எண். 1363, நிதி (சிறப்பு) துறை, நாள் 7-10-72-ல் தனி நபர் குழுவின் பரிந்துரைகள் அடங்கியுள்ளன. இந்த ஆணைப் படி முன்பணிக் காலத்திற்கான 'வெயிட்டேஜ்' 2-10-1970 முதல் கணக்கிடப்பட்டாலும், சம்பள உயர்வின் பயன் (Monetary effect) 1-9-1972 முதல் தான் கிடைக்கும்! இதை மனதில் கொண்டு, 'வெயிட்டேஜ்' கிடைக்கவில்லை என்று கூறும் நடுநிலைப் பள்ளி ஆசிரியப் பெரு மக்கள் தங்கள் பிரச்னையை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

2-10-1970-க்கு முன்பு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு மட்டுமே மேற்கூறிய ஆணைகளின்படி முன் பணிக் காலத்திற்கான 'வெயிட்டேஜ்' (கால அளவிற்கேற்ப) கிடைக்கும்! 2-10-1970-க்குப் பிறகு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 'வெயிட்டேஜ்' கிடைக்காது. ஏனெனில் 2-10-1970-ல் எந்த பதவியில் இருந்தார்களோ, அந்த பதவியில் அவர்கள் ஆற்றியுள்ள பணிக் காலத்திற்கு 'வெயிட்டேஜ்' கொடுத்துதான், புதிய சம்பள விகிதங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும் (Fixation of pay). எனவே, 2-10-70-க்குப் பிறகு ஏதேனும் ஒரு தேதியில் பதவி உயர்வு பெற்று நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக ஆகி இருந்தால், அந்த தேதியில் அவர்கள் வாங்கும் சம்பள விகிதத்தை, நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் சம்பள விகிதத்தில் பொருத்தமான நிலையில் (Proper stage) வைத்து சம்பளம் வரையறுக்கப்பட்டிருக்கும். ஆனால் அப்பொழுது 'வெயிட்டேஜ்' கொடுக்கப்பட மாட்டாது!


உதாரணத்திற்கு திரு பி. கே. கணபதி அவர்கள் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள்: அவர் 1-6-71 முதல் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். அதற்கு முன் அவர் ஆசிரியராகவே இருந்திருப்பார். ஆசிரியராக இருந்த அவருக்கு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி 2-10-70 முதல் புதிய சம்பள விகிதம் (முன் பணிக் காலத்திற்கு ஏற்ப 'வெயிட்டேஜ்' கொடுத்து) வரையறுக்கப்பட்டிருக்கும்.

அவர் 1-6-71-ல் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றதும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்குள்ள சம்பள விகிதத்தில் பொருத்தமான நிலையில் அவரது சம்பளம் வரையறுக்கப்படும். முன்பே, அவருக்கு முன்பணிக் காலத்திற்கான 'வெயிட்டேஜ்' வழங்கப்பட்டுள்ளதால், மீண்டும் 'வெயிட்டேஜ்' கிடைக்காது.

2-10-70-க்கு முன்பே நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி இருந்து, தனி நபர் குழுவின் பரிந்துரைப் படி சம்பள விகிதம் மாற்றப்பட்டிருக்குமானால் (Revised) மட்டுமே, 2-10-70 முதல் மாற்றப்பட்ட சம்பள விகிதம் (முன் பணிக் கால 'வெயிட்டேஜ்') உட்பட வரையறுக்கப்படும். ஆனால் மாற்றப்பட்ட சம்பள விகிதம் (Revised scale of pay) காரணமாக கிடைக்கும் பொருளாதாரப் பயன் (monetary benefit) 1-9-72 முதல் மட்டுமே கிடைக்க மேற்கூறிய ஆணை எண். 1363 வழி செய்கிறது.

இவைகளை மனதிற்கொண்டு உங்கள் பிரச்னைகளை அலசிப் பாருங்கள். அப்படியும் விளங்கவில்லை எனின், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ, அல்லது மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திலோ அல்லது தங்கள்மாவட்ட என். ஜி. ஓ. சங்க அலுவலகத்திலோ இதுபற்றி விவரமாகக் கேட்டு அறிவதே மேல்!

**வினா :** 'கராத்தே' கலையில் நான் சேர்ந்து பயில விரும்புகின்றேன். எனவே அதற்கு விண்ணப்பிக்கும் வழி முறைகள் அனைத்தையும், கராத்தே ஆசிரியர் திரு மணி அவர்களின் விலாசத்தையும், கட்டணம் போன்றவைகளையும் தெரிவிக்கவும். இதை கற்பவருக்கு மானியம், சிறப்புக் கட்டணம் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா? நான் சென்னையில் கிராமப் பகுதியில் இருப்பதால், வந்து கற்க வசதி உள்ளதா?



—ஜி. ராஜசேகரன்,
1/516, கந்தசாமி கோயில் காலனி,
எருக்கஞ்சேரி,
சென்னை—600051.

**விடை :** 'கராத்தே' கற்க விரும்பினால் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி பயிற்சியில் சேர்ந்து கொள்ளவேண்டும். இது பற்றிய முழு விவரமும் அறிய கராத்தே ஆசிரியருக்கு எழுதிக் கேட்பதே நல்லது. அவரது முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திரு மாஸ்டர் தமிழ்மணி,
தென்னிந்திய கராத்தே கழகம்,
கார்ப்பரேஷன் ஸ்டேடியம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை-600034.

'கராத்தே' பயிற்சி பெற மானியம் ஏதும் கிடையாது. நீங்கள் கட்டணம் செலுத்தியே பயிற்சி பெற வேண்டும்.

—ஆர். எம்.

# உங்கள் உயர்வுக்கு வசதியான வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளுங்கள்



கரகம் — தமிழ்நாட்டின் பிரபல கிராமிய நடனம்

## இன்றே வாங்குங்கள்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)


முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**64-வது குலுக்கல் நாள்:**

**28-3-1974**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

சேலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009